பொதுசன நூலகம்

விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka


# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 தை 11 சனிக்கிழமை (24.01.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 036

SATS-TECH ENGINEERS



NEW PACKAGES & RENEWAL

CALL :- 222 5908/222 8812


# ஈழத் தமிழர்களைக் காப்பாற்றுமாறு இந்திய அரசுக்கு இறுதி வேண்டுகோள்

## முதல்வர் கருணாநிதி அறிவிப்பு

(சென்னை)

இலங்கையில் அழிந்து கொண்டிருக்கும் தமிழினத்தை காப்பாற்ற இந்திய அரசாங்கத்திற்கு இறுதி வேண்டுகோள் விடுக்கிறேன் என்று தமிழ்நாடு முதல்வர் கலைஞர் மு.கருணாநிதி அறிவித்துள்ளார்.

(12ஆம் பக்கம் பார்க்க)



## 'ரிவிர' ஏட்டின் பிரதம ஆசிரியர் மீது தாக்குதல்

(கொழும்பு)

கொழும்பில் இருந்து வெளியாகும் ரிவிர சிங்கள ஏட்டின் பிரதம ஆசிரியர் நேற்று அடையாளம் தெரியாதோரால் தாக்குதலுக்குள்ளாகி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பின் புறநகர்ப் பகுதியான கம்பஹாமாவட்டம் இம்புல்கொடவில் உள்ள தனது வீட்டில் இருந்து மனைவியுடன் காரில் அலுவலகத்திற்கு சென்று கொண்டிருந்த போது இரண்டு மோட்டார் சைக்கிள்களில் பின் தொடர்ந்து வந்த (12ஆம் பக்கம் பார்க்க)

## ஈழத்தமிழர்களை காப்பதற்கான ஏற்பாடுகள் நடக்கின்றதாம்!



### சோனியாகாந்தி தெரிவிப்பு

(புதுடில்லி)

ஈழத்தமிழர்களைக் காப்பாற்ற நடவடிக்கை எடுக்கப்படுவதாக இந்திய காங்கிரஸ் கட்சி தலைவி சோனியாகாந்தி உறுதியளித்துள்ளார். தமிழக காங்கிரஸ் தலைவர் தங்கபாலு நேற்று முன்தினம் அவசரமாக டெல்லி புறப்பட்டுச் சென்று நேற்று காலை அவர் காங்கிரஸ் தலைவி சோனியாவை சந்தித்து இலங்கையில் நடந்து வரும் கடும் போர் காரணமாக (12ஆம் பக்கம் பார்க்க)

## மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த பிரித்தானிய அரசு வேண்டுகோள்

(கொழும்பு)

மனித உரிமை மீறல் சம்பவங்களை தடுப்பதற்கு இலங்கை அரசாங்கம் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கோரிக்கை விடுத்திருக்கும் பிரித்தானியா, மோதலில் ஈடுபட்டிருக்கும் இரண்டு தரப்பினரும் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் எனக் கூறியுள்ளது.

இலங்கையில் உள்ள அனைத்து சமூகமும் பிரச்சினைகள் இன்றி சுதந்திரமாக, சமாதானமாக வாழக்கூடிய சூழலொன்று ஏற்படுத்தப்பட வேண்டும் என பிரித்தானியாவின் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் டேவிட் மிலிபான்ட் தெரிவித்தார்.

இலங்கையில் கடத்தல்கள், படுகொலைகள், காணாமல் போதல்கள் போன்ற மனித உரிமை மீறல்கள் தொடர்வாகத் தகவல்கள் வெளியாகின்றன.

மனித உரிமை மீறல்களைத் தடுப்பதற்கு இலங்கை (12ஆம் பக்கம் பார்க்க)

## மற்றொரு பாதுகாப்பு வலயம் மீது நேற்று எறிகணைத் தாக்குதல்

### இந்துக் குரு உட்பட ஐவர் பலி; 46 பேர் காயம்

(முல்லைத்தீவு)

வன்னி மக்களுக்கான மற்றுமொரு பாதுகாப்பு வலயமான இருட்டுமட்டு மக்கள் பாதுகாப்பு வலயம், தேராவில் மற்றும் மயில் வாகனம் பகுதிகள் மீது படையினர் நடத்திய எறிகணைத் தாக்குதல்களில் 5 பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் 46 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

விசுவமடு மயில்வாகனபுரம் இடம்பெயர்ந்த மக்கள் குடியிருப்புக்கள் மீது நேற்றுக் காலை 6.00 மணியளவில் படையினர் நடத்திய எறிகணைத் தாக்குதலில் இந்து மதகுரு ஒருவர் கொல்லப்பட்டுள்ளதுடன் 4 பேர் படுகாயமடைந்துள்ளனர். கொல்லப்பட்டவர் சிவம்குருக்கள் (12ஆம் பக்கம் பார்க்க)

## பிரபாகரன் வன்னியிலிருந்து செல்லவில்லை -கருணா

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் இன்னமும் வன்னியில் இருந்து வெளியேறவில்லை என தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளின் தலைவர் வெளிநாடு ஒன்றிற்கு தப்பிச் செல்வது என்பது முடியாத காரியம் எனவும் அண்டை நாடான இந்தியா அவரை ஏற்கப்போவதில்லை எனவும் கூறிய அவர்,தென்னாசிய நாடுகளிற்கு செல்வதற்கான (12ஆம் பக்கம் பார்க்க)

## தங்களைக் காப்பாற்றுமாறு வன்னி மக்கள் கோரிக்கை

(லண்டன்)

வன்னியில் இடம்பெற்றுவருகின்ற யுத்தத்துள் சிக்குண்டு அல்லலுறும் தமது பாதுகாப்பினை அரசும் விடுதலைப்புலிகளும் உறுதிப்படுத்தித்தரவேண்டும் என அப்பகுதி மக்கள் தம்மிடம் கோரிக்கை விடுத்ததாக முல்லைத்தீவு அரச அதிபர் எமில்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு நோக்கிய படையினரின் முன்னேற்ற நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் எறிகணை வீச்சுக்களுள் சிக்குண்டு பல அப்பாவிப்பொதுமக்கள் பலியாகியும் காயமடைந்தும் உள்ளநிலையில் காயமடைந்தவர்களுக்கான உரிய சிகிச்சைகள் கூட அங்கு கிடைக்காத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையிலே அப்பகுதி மக்கள் தமது பாதுகாப்புத் தொடர்பாக தம்மிடம் கோரிக்கை விடுத்ததாக நேற்று முன்தினம் வியாழக்கிழமை வவுனியா சென்றுள்ள முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் (12ஆம் பக்கம் பார்க்க)

## பயங்கரவாதத்தை தோற்கடிக்கும் போருக்கு யப்பான் அரசு ஆதரவு

### யசூசி அகாசி தெரிவிப்பு

(கொழும்பு)

பயங்கரவாதத்தை தோல்வியடைய செய்வதற்கு தற்போதைய அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுவருவதாக இலங்கைக்கான ஜப்பானிய விசேட சமாதான தூதுவர் யசூசி அகாசி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் அலரி மாளிகையில் நேற்று மேற்கொண்ட சந்திப்பின் போதே அவர் இந்த கருத்தினை வெளியிட்டார்.

மிக விரைவில் இலங்கை மக்கள் அனைவரும் சமாதானத்துடனான ஐக்கிய இலங்கைக்குள் வாழ்வதற்கான சந்தர்ப்பம் ஏற்படும் என தாம் நம்புவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஜப்பானின் இலங்கைக்கான விசேட பிரதிநிதி யசூசி அகாசி இன்று தமிழ்த்தேசியக் (12ஆம் பக்கம் பார்க்க)

## குடும்பஸ்தரைத் தாக்கி நகைகள் அபகரிப்பு

(யாழ்ப்பாணம்)

திருடர்களின் வாள் வெட்டிற்கு இலக்காகி படுகாயமடைந்த நிலையில் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று அதிகாலை ஒரு மணியளவில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பாகத் தெரிய வருவதாவது;

றக்கா வீதியிலுள்ள வீடொன்றினுள் நேற்று அதிகாலை 12.45 மணியளவில் புகுந்த இரண்டு திருடர்கள் அங்கிருந்த குடும்பஸ்தரை வாளினால் வெட்டி காயப்படுத்தி விட்டு பல இலட்சம் ரூபாய் பெறுமதியான நகைகளை அபகரித்துச் சென்றுள்ளனர்.

பனை தென்னை அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்க பணியாளரான க.தர்மகுலசிங்கம் (வயது 53) என்பவரே வாள்வெட்டிற்கு இலக்கானவர்ஆவார்.

படுகாயமடைந்த பிரஸ்தாப நபர் அயலவர்களின் முயற்சியினால் நேற்று அதிகாலை 1.15 மணியளவில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ச-7)

## முல்லைத்தீவில் விமானத் தாக்குதல்

விமானப்படையினரின் போர் விமானங்கள் மற்றும் எம்.ஐ-24 ஹெலி கொப்டர் முல்லைத்தீவில் இனம் காணப்பட்ட விடுதலைப் புலிகளின் இலக்குகள் மீது தாக்குதல் நடத்தியிருப்பதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

முல்லைத்தீவு தெற்கு, விஸ்வமடு கிழக்கு மற்றும் கல்மடுக்குளம் வடகிழக்கு ஆகிய பகுதிகள் மீது நேற்று விமானத்தாக்குதல்கள் நடத்தப்பட்டதாகவும் முதலாவது விமானத் தாக்குதல் காலை 6.30 மணிக்கு 59 ஆவது படைப்பிரிவின் உதவியுடன் நடத்தப்பட்டதாகவும் விமானப்படைப் பேச்சாளர் விங்கொமாண்டர் ஜனக பெரேரா கூறினார்.

பிற்பகல் 12.30 மணியளவில் கல்மடுக்குளம் பகுதியில் மற்றுமொரு விமானத் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் முற்பகல் 9.45 மணியளவில் விமானப்படையினரின் ஹெலிகொப்டர் விஸ்வமடு பகுதியில் குண்டுத் தாக்குதல்களை நடத்தியதாகவும் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. (ச-5)

## பரு. பிரதேச செயலர் பிரிவின் அபிவிருத்திப் பணிகள் ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பகுதியின் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பில் நேற்று சமூகசேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சரும் வடமாகாணத்துக்கான விசேட செயலணியின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா தலைமையில் ஆராயப்பட்டது.

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் நிலவுகின்ற பல்வேறு குறைபாடுகள், தடைகள் மற்றும் தேவைகள் என்பன தொடர்பில் மேற்படி ஆய்வில் தனித்தனியாக இனம் காணப்பட்டதுடன், இவற்றில் உடனடியாக தீர்க்கப்படக்கூடிய விடயங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

ஏனைய விடயங்கள் தொடர்பில் உரிய துறை சார்ந்தவர்களது அறிக்கைகள் பெறப்பட்டு அவை, குறுகிய மற்றும் நீண்ட கால வேலைத்திட்டங்களாக முன்னெடுக்கப்படவுள்ளன.

யாழ்.குடாநாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தற்போது பிரதேச செயலர் பிரிவுகள் மட்டத்தில் ஆராய்ந்து, நடவடிக் கைகளை மேற்கொண்டு வருகின்றார். (ச)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் எந்திரவியல் தொழிநுட்பப் பட்டப்படிப்பினைத் தொடருகின்ற,தொடர இருக்கின்ற மாணவர்களுக்கான ஆங்கிலத் தகைமைகாண் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

எனவே இப்பரீட்சைக்கு தோற்ற வேண்டியவர்கள் விண்ணப்பப்படிவத்தினை யாழ். பிராந்திய நிலையத்தில் பெற்று விண்ணப்பிக்குமாறு பிராந்திய இணைப்பாளர் கேட்டுள்ளார். (ச)

## உதைபந்தாட்ட பயிற்சி முகாம்

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 17 வயதுப் பிரிவு பாடசாலை மாணவர்களுக்கான உதைபந்தாட்ட பயிற்சிமுகாம் நாளை காலை 9 மணிக்கு சென் பற்றிக்ஸ் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக சம்மேளனத்தின் யாழ். இணைப்பாளர் ம.பேர்ட்டி பனிஸ்ரர் அறிவித்துள்ளார்.

இப்பயிற்சி முகாமிற்கு யாழ். மாவட்டத்திலிருந்து அழைக்கப்பட்ட 20 பாடசாலை வீரர்களையும் கலந்துகொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (ச-5)

## சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு மாபெரும் விளையாட்டு போட்டி

(யாழ்ப்பாணம்)

தேச சக்தியை வளர்க்க,தேக சக்தியை வளர்ப்போம் எனும் எண்ணக்கருவுக்கமைய வட மாகாணத்தின் விளையாட்டு வீரர்களின் திறமைகளை வெளிக்கொண்டு வருமுகமாக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரும் வட் மாகாணத்திற்கான விசேட செயலணியின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்.

இந்த வகையில் மறைந்து போயிருக்கும் பாரம்பரிய விளையாட்டுக்கள் உள்ளடங்கலாக அனைத்து மட்டத்திலுமான விளையாட்டுகளுக்கு மீண்டும் புத்துயிர் அளிக்கும் வகையில் யாழ். மாவட்டத்தில் எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு மாவட்ட ரீதியிலான மாபெரும் விளையாட்டுப் போட்டி ஒன்றை நடத்துவதற்கான ஏற்பாடுகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றன.

இதன் பிரகாரம், ஆண்களுக்கான உதைபந்தாட்டம்,பெண்களுக்கான வலைப்பந்தாட்டம்,இருபாலாருக்குமான கரப்பந்தாட்டம், கூடைப்பந்தாட்டம்,ஹாக்கி,மரதன்,சைக்கிளோட்டம்,மாட்டு வண்டி ஓட்டம்,கயிறு இழுத்தல்,தலையணை மோதல் போட்டி உட்பட பல்வேறு போட்டிகள் இடம்பெறவுள்ளன.

மேற்படி போட்டிகளில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த விளையாட்டு வீரர்களும் வீராங்கனைகளும் பங்குபற்ற இயலும். இதற்கான விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும் என சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

## இறுதிச் சுற்றுப்போட்டி

(கொக்குவில்)

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகமும் சனசமூக நிலையமும் இணைந்து நடாத்தும் விக்கிரம்-ராஜன்-கங்கு கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதிச் சுற்றுப்போட்டி நாளை காலை 8.30 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட விவசாய அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் எம்.பற்றிக் றஞ்சன், சிறப்பு விருந்தினராக கொக்குவில் இந்துக்கல்லூரி அதிபர் ஏ.அகிலதாஸ் ஆகியோர் கலந்துகொள்கின்றனர். (ச-7)

## தீப்பற்றியதில் வயோதிபர் காயம்

மெத்தை தீப்பற்றியதில் காயமடைந்த வயோதிபர் ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அச்சுவேலி தெற்கை சேர்ந்த சிவசம்பு கருணானந்தன் (வயது68) என்ற வயோதிபரே தீக்காயங்களுடன் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளவராவார்.

புகைப்பிடிக்கும் பழக்கமுள்ள இவர், நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் மெத்தைக்கு மேல் இருந்து புகைப்பிடித்த போது மெத்தை தீப்பற்றியதில் படுகாயமடைந்தார். இவரது இரண்டு கால்களும் நான்கு வருடங்களுக்கு முன்னர் செயற்படாமல் போனதாக தெரிவிக்கப்பட்டது. (ச-7)

## ஆரம்ப விழா

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தால் நடாத்தப்படும் சிறு வணிக முகாமைத்துவ கற்கை நெறிக்கான ஆரம்பவிழா வைபவம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.பிராந்தியநிலையத்தில் இடம் பெறவுள்ளதாக இணைப்பாளர் அறிவித்துள்ளார். (ச)


## தொழில் வாய்ப்பு பயிற்சி நிறுவனம்
## Vocational Oriented Training Organization (VOTO)

**தொழிற் பயிற்சி விழிப்புணர்வும் தொழில் வழிகாட்டல் கருத்தரங்கும்**

இடம் : சிறி பத்மநாதன் கட்டிடம், சிலையடி, மந்திகை.
காலம் : 31.01.2009
நேரம் : காலை 10.00 மணி

பாடசாலைக் கல்வியை முடித்த இளைஞர், யுவதிகள் எதிர்காலத்தில் தொழிற்பயிற்சி ஒன்றின் மூலம் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் தமது வாழ்வை மேம்படுத்துவதற்கான குறுகிய கால பயிற்சிகள்.

புதிய பிரிவு ஆரம்பம் : 30.01.2009 - 31.01.2009

1. கொம்பியூட்டர் காட்வெயர் - (3 மாதம்)
2. மின் தொழில்நுட்பம் (Electrical) - (6 மாதம்)
   Single Phase Tihgee Rhase
   மோட்டார் றீவயின்டிங் - (2 மாதம்)
3. குளிர்சாதன இயந்திரங்கள் Refrigeration and Air Conditioning திருத்தும் பயிற்சி
   Frige (2 மாதம்) A.C (3 மாதம்)
4. மோட்டார் வாகன பொறியியல்
   மோட்டார் சைக்கிள் நீர் இறைக்கும் இயந்திரம் திருத்தும் முறை
   மோட்டார் சைக்கிள் (4 மாதம்)
   நீர் இறைக்கும் இயந்திரம் (2 மாதம்)
5. வாகனங்களுக்கான மின் இணைப்பு (3 மாதம்)
   வாகனப் பெயின்டிங் பயிற்சி
6. றேடியோ T.V., CD
   மொனிற்றர், U.P.S பயிற்சி நெறி
   Radio (2 மாதம்) T.V. (3 மாதம்)
   CD (2 மாதம்) மொனிற்றர், U.P.S. (2 மாதம்)
7. வேல்டிங் welding Gos Are (4 மாதம்)

சகல பயிற்சி நெறிகளுக்கும் ஆரம்ப மின் இலத்திரனியல் வகுப்புக்கள் இலவசம்

சனி, ஞாயிறு வகுப்புக்களும் நடைபெறும்.
தொழில் செய்வோருக்கான பகுதிநேர வகுப்புக்களும் நடைபெறும்.

யாழ். தொழில் நுட்பக் கல்விமையம்
சிலையடி மந்திகை, புலோலி.
(சிறிபத்மநாதன் கட்டிடம்).

தொடர்புகளுக்கு: - T.P.:- 0779152617

(2142)


## பொதுச்சுகாதார வெளிக்கள உதவியாளர் ஆட்சேர்ப்பு நேர்முகப் பரீட்சை

பொதுச்சுகாதார வெளிக்கள உதவியாளர் ஆட்சேர்ப்பிற்கு இதுவரை விண்ணப்பிக்காத பின்வரும் தகைமைகள் உள்ள பரீட்சார்த்திகளிற்கான நேர்முகப் பரீட்சை 29.01.2009 ஆம் திகதி வியாழக்கிழமை ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள பிராந்திய சுகாதாரசேவைகள் பணிமனையில் முற்பகல் 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

**1. வயதெல்லை 18 வயது - 40 வயது.**

**2. ஆண்பாலாராக இருத்தல்வேண்டும்**

**3. தகைமைகள்**

- இலங்கைப் பிரஜையாக இருத்தல்வேண்டும்.
- வடமாகாணத்தில் எப்பகுதியிலும் சேவையாற்றக் கூடியவராக இருத்தல்வேண்டும்.
- நல்ல தேகாரோக்கியம் உடையவராகவும் சேவையாற்றுவதற்கு விருப்பமுடையவராகவும் ஆண்பாலாராகவும் இருத்தல்வேண்டும். மருத்துவ அறிக்கையில் தேகாரோக்கியம் அற்றவரென தெரியவருமிடத்து அவர் பயிற்சி நெறியை மேற்கொள்வதற்கு தகைமையற்றவராக கருதப்படுவார்.
- நியமனம் கோரப்படும் மாவட்டத்தை சொந்த இடமாகக் கொண்டிருக்கவேண்டும்/ கடந்த மூன்று வருடங்களாக குறிப்பிட்ட மாவட்டத்தில் தொடர்ந்து வசித்திருத்தல் வேண்டும்.

**4. கல்வித் தகைமைகள்**

- க.பொ.த.(உ/த) பரீட்சையில் இரசாயனவியல், பௌதிகவியல், விலங்கியல், தாவரவியல், உயிரியல், விவசாய விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் விலங்கியல் அல்லது உயிரியல் உட்பட மூன்று பாடங்களில் க.பொ.த (உ/த) பரீட்சையில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் கட்டாயமாகும்.
- க.பொ.த.(சா/த) பரீட்சையில் தமிழ்/சிங்கள மொழி , கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் உள்ளடங்கலாக மேலும் ஒரு பாடத்திற்கு திறமைச்சித்திகளுடன் க.பொ.த. (சா/த) பரீட்சையில் 6 பாடங்களில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத வகையில் சித்தியடைந்திருத்தல்வேண்டும்.

**5. பதவியின் தன்மை நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதும்.**

**6. பயிற்சியின் தன்மை மற்றும் விபரங்கள்.**

- ஒரு வருட முழு நேரப் பயிற்சியுடன் பயிற்சியில் சேர்ந்து கொள்ளும் பயிலுநர்கள் பயிற்சிக் கல்லூரியில் நடைமுறையிலுள்ள சட்ட திட்டங்களுக்கும், சுகாதார திணைக்களத்தினால் காலத்திற்குக் காலம் விதிக்கப்படும் வேறு கட்டளைகளிற்கும் கீழ்ப்படிந்தவராகவும் இருத்தல்வேண்டும்.

தகுதி வாய்ந்த பரீட்சார்த்திகள் பின்வரும் ஆவணங்களின் மூலச்சான்றிதழ் மற்றும் அவற்றின் பிரதிகளுடன் சமுகமளிக்கவும்.

1 தேசிய அடையாள அட்டை
2 பிறப்புச் சான்றிதழ்
3 வதிவிடச் சான்றிதழ் (3வருடங்கள் இம்மாவட்டத்தில் வசித்திருக்கவேண்டும்)
4 க.பொ.த. (சா.த) பரீட்சைப் பெறுபேறு
5 க.பொ.த. (உ.த) பரீட்சைப் பெறுபேறு
6 இரு நற்சான்றிதழ் பத்திரம்

**வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன்,**
**பிராந்திய பணிப்பாளர்,**
**சுகாதார சேவைகள், யாழ்ப்பாணம்.**

(இ)

## இன்று ஒரு தகவல்

# இரவில் வெளிச்சம் !

ஒரு ஊரில் ஒருவர் இருந்தார். மிகவும் நல்லவர். யாருக்காவது எதையாவது கொடுத்துக் கொண்டே இருப்பார். கொடையாளி. தினமும் யாராவது ஒருவருக்கு ஏதாவது கொடுக்கவில்லை என்றால் அவருக்குத் தூக்கம் வராது. அப்படி ஒரு பழக்கம்.

அதுமட்டுமல்ல... அவர் கொடுப்பது அடுத்தவர்களுக்குத் தெரியாது. அவ்வளவு இரகசியமாக அதைக் கொடுப்பார். வலதுகை கொடுக்கிறது இடது கைக்குத் தெரியாது என்று சொல்வார்களே அதேமாதிரி.

ஒரு நாள் இரவு, அவர் ஏற்கனவே தயாராகக் கட்டி வைத்திருந்த பண முடிப்பை கையில் எடுத்துக் கொண்டு வீட்டை விட்டுப் புறப்பட்டார்.

இன்றைக்கு யாராவது வருவார்களா என்று யோசித்துக் கொண்டே அவர் வரும்போது, யாரோ ஒருவர் எதிரில் வருவது தெரிந்தது. உடனே அவரிடம் போய் தன்னிடமிருந்த பணமுடிச்சை அவரது கையில் திணித்து விட்டு வேக வேகமாக திரும்பி வந்தார்.

''அப்பாடா... ஒரு வழியாக யாருக்கும் தெரியாமல் இன்றைக்கு தருமம் பண்ணியாச்சு!'' என்ற மகிழ்ச்சியில் நிம்மதியாக தூங்கினார்.

மறுநாள் காலையில் ஊரெல்லாம் ஒரே பேச்சு!

''நேற்றிரவு ஒரு திருடனின் கையில் யாரோ ஒருவர் பணத்தைக் கொடுத்து விட்டுப் போய்விட்டாராம்'' என்று எல்லோரும் பேசிக் கொண்டார்கள்.

இதைக் கேள்விப்பட்டதும் அந்தப் பெரியவருக்கு மிகவும் கவலையாகப் போய்விட்டது. "அடடா... போயும் போயும் ஒரு திருடனுக்கா உதவி செய்தேன். பிரயோசனமில்லாமல் போய் விட்டதே" என்று நினைத்தார்.

சரி... இன்றைக்கும் யாருக்காவது உதவி செய்வோம் என்று முடிவு செய்தார்.

இரவு வந்தது. இவர் வழக்கம் போல கையில் பண முடிச்சுடன் தெருவில் இறங்கி நடந்தார்.

எதிரில் ஒரு பெண் உருவம் மங்கலாக தெரிந்தது. இவர் உடனே அந்தப் பெண்ணிடம் பணத்தைக் கொடுத்துவிட்டு திரும்பி வந்தார்.

மறுநாள் காலையில் ஊர் பூராகவும், "நேற்றிரவு நெறி தவறி நடக்கும் ஒரு பெண்ணின் கையில் யாரோ பணத்தைக் கொடுத்துவிட்டுப் போயிருக்கிறார்" என்று கதைத்துக் கொண்டார்கள்.

''அடடா ! இன்றைக்கும் தவறுதலாக நடந்து போய் விட்டதே!'' என்று வருத்தப்பட்டார். "இருக்கட்டும். இன்றைக்கும் ஏதாவது தருமம் பண்ணுவோம்'' என்று நினைத்துக் கொண்டு மூன்றாம் நாள் இரவும் போனார்.

அப்பொழுதும் ஒருவர் எதிரில் வந்தார். இவர் பணத்தைக் கொடுத்துவிட்டு வந்தார். மறுநாள் காலையில், ஒரு செல்வந்தர் கையில் யாரோ பணத்தைக் கொடுத்து விட்டுப் போயிருக்கிறார்கள் என்று பேசிக் கொண்டார்கள்.

இவருக்கு மிகவும் கவலையாகிவிட்டது. என்ன இது... தினமும் இப்படி ஆகிறதே... என்று நினைத்துக் கொண்டே படுத்துத் தூங்கினார். அன்றிரவு ஒரு கனவு கண்டார் அதில் இறைவன் வந்து சொன்னாராம் :

இதோ பாரப்பா... நீ கொடுத்த தர்மம் வீணாகிப் போய் விடவில்லை. உன்னிடம் பணம் வாங்கிய அந்தத் திருடன் திருந்தி விட்டான். அந்தப் பெண்ணும் திருந்தி விட்டாள். அந்த செல்வந்தனும் கொடையாளி ஆகிவிட்டான், என்றாராம்.

இந்தக் கதையை நபிகள் நாயகம் கூறியிருக்கிறார். இதில் உள்ள கருத்து என்னவெனில்,

நல்ல மனதுடன் தருமம் பண்ணினால் அது வீணாகப் போய்விடுவதில்லை. தர்மம் தன்னை மட்டுமல்ல... அடுத்தவர்களையும் தீமையிலிருந்து காப்பாற்றும்! இதுதான் நாம் புரிந்து கொள்ளவேண்டியது! இந்தக்காலத்திலும் இது மாதிரியான சம்பவங்கள் நடப்பதுண்டு.

ஒரு பெரியவர் இருட்டில் நடந்து வந்து கொண்டிருந்தார். எதிரில் வந்த ஒருவன் வலுக்கட்டாயமாக இவரது கையைப் பிடித்து ஒரு பணமுடிப்பைக் கொடுத்து வைத்திருக்கச் சொல்லி விட்டு... விலகிப் போய்விட்டான். பெரியவருக்கு ஆச்சரியம்.

இந்தக் காலத்திலும் வலது கை கொடுப்பது இடது கைக்கு தெரியக்கூடாது என்று நினைக்கும் கொடையாளிகள் இருக்கிறார்கள் போலிருக்கே... என்று நினைத்தார்.

கொஞ்சத்தூரம் போயிருப்பார். அதற்குள் அவன் திரும்பி வந்து கொடுத்த பண முடிப்பை திரும்பி வாங்கிக் கொண்டான். இவருக்கு ஒன்றும் புரியவில்லை.

"ஏன் இப்படி செய்கிறாய்?'' என்றார்.

''அது ஒன்றுமில்லை. எனக்குப் பின்னால் பொலிஸ் துரத்திக் கொண்டு வந்தது. அதுதான் கொஞ்ச நேரம் இதை உங்களிடம் கொடுத்து வைத்திருந்தேன். இப்ப போய் விட்டது. இனிமேல் பயமில்லை'' என்று சொல்லிவிட்டு அவன் பாட்டுக்கு நடந்து போனான்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# அரச பாடசாலைகளில் மாணவர் அனுமதிக்கு மேலதிக கட்டணங்கள் செலுத்த தேவையில்லை

## கல்வியமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் பெறப்பட்ட புள்ளிகளின் அடிப்படையில் அரசாங்கப் பாடசாலைகளில் மாணவர்களை அனுமதிக்கும் போது பாடசாலை அபிவிருத்திச் சங்கக் கட்டணம் மற்றும் வசதிக் கட்டணம் ஆகியவற்றை மாத்திரமேஅறவிட வேண்டுமென கல்வியமைச்சு சகல அதிபர்களுக்கும் அறிவித்துள்ளது.

இதற்கமைய அரசாங்கப் பாடசாலைகளில் தமது பிள்ளைகளை அனுமதிப்பதற்காக பெற்றோர் குறிப்பிட்ட இரு வகைக் கட்டணங்களைத் தவிர்ந்த ஏனைய கட்டணங்களை செலுத்த வேண்டியதில்லையென கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

மேலதிக கட்டணம் அறவிடப்படுமாயின் அது தொடர்பாக கல்வியமைச்சுக்கு அறிவிக்குமாறு அமைச்சின் செயலாளர் எம்.எம்.என்.ரி. பண்டார சகல பெற்றோர்களிடமும் வேண்டுகேள் விடுத்துள்ளார். (ஓ-4)

## ஆன்மீக நிகழ்வு

புலோலி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில் சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்று வரும் ஆன்மீக நிகழ்வு தொடரில் நாளை ஞாயிற்றுக்கிழமை பகல் 10 மணி பூசை முடிவுற்றதும் *அறுவகை சமயங்களில் வைணவம்* என்னும் விடயம் பற்றி ஸ்ரான்லிக் கல்லூரி ஆசிரியர் மதுரகவி காரை. எம்.பி. அருளானந்தம் ஆன்மீக சொற்பொழிவாற்றுவார். (ஓ-35)

## சுதந்திர தினத்தை முன்னிட்டு

# கொழும்பில் 9 பாடசாலைகள் 8 நாட்களுக்கு மூடப்படவுள்ளன

(கொழும்பு)

கொழும்பு மாவட்டத்தில் உள்ள ஒன்பது பாடசாலைகள் எதிர்வரும் 28ஆம் திகதி முதல் எட்டு நாட்களுக்களுக்குள் மூடப்படவுள்ளன.

சுதந்திர தின ஏற்பாடுகளை மேற்கொள்வதற்காகவே இவ்வாறு பாடசாலைகள் மூடப்படுவதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

சுதந்திர தின பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ள பொலிஸ் மற்றும் பாதுகாப்புப் படையினர் தங்குவதற்காகவே இந்த ஏற்பாடு மேற்கொள்ளப்படுகிறது.

தேர்ஸ்டர்ன், நாலந்தா, தேவி பாலிகா, சுசமயவர்தன, ரத்னாவலி பாலிகா, சங்கமித்த பாலிகா, கோதமி பாலிகா,. யஸோதரா பாலிகா, ஸீ.டப்ளியு. டப்ளியு.கன்னங்கரா ஆகிய பாடசாலைகளே இவ்வாறு மூடப்படவுள்ளன. (ஓ-6)

# க.பொ.த (சா/த) கணிதம் II விஷேட பரீட்சை இன்று

(பலாங்கொடை)

கல்விப் பொதுத்தராதரப் பத்திர (சா/த) பரீட்சையின் புதிய பாடத் திட்டத்திற்கு அமைவாக கடந்த வருடம் நடைபெற்ற கணித பாடத்தின் பகுதி II இற்கான விஷேட பரீட்சை இன்று சனிக்கிழமை காலை 9.30 முதல் 11.30 மணி வரையில் நடைபெறவுள்ளது என்று பரீட்சை ஆணையாளர் நாயகம் அநுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

இன்று நடைபெறவுள்ள கணிதம் II விஷேட பரீட்சைக்கு பாடசாலை பரீசார்த்திகள் மூன்று இலட்சம் பேர் தோற்ற இருப்பதுடன் இவர்களுக்கான அனுமதி அட்டைகள் அந்தந்த பாடசாலைகளின் அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

2008 டிசெம்பர்மாதம் நடைபெற்ற பரீட்சை நிலையங்களிலேயே இவ்விஷேச பரீட்சையும் நடைபெறுவதற்கான சகல ஏற்பாடுகளும்மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ஓ-6)

## இராசி பலன்

*24.01.2009*
*(தை11, சனிக்கிழமை)*
*பூராடம் முழுவதும்*
*திரயோதசி முற்பகல் 10.13 மணிவரை*
*இராகுகாலம் 9.36-11.06 மணிவரை*
*சுபநேரம்-3.36-5.06 மணிவரை*
*நயினாதீவு முத்துக்குமாரசாமி குருபூஜை*


| | |
|---|---|
| மேடம் | சரீரப் பிரயாசை, பிதாசிந்தை, கட்டுப்பாடு, புதிய திட்டமிடல். |
| இடபம் | காரிய தடங்கல், போசன சுகம், எதிர்பாராத பிரச்சினை, வாகன பயம். |
| மிதுனம் | தெய்வ சிந்தை, செல்வாக்கு, களஸ்திர நன்மை, எடுத்த காரியம் கைகூடும். |
| கடகம் | நல்லசெய்தி, காரியசித்தி, விருந்துபசாரம், சுபநிகழ்வு. |
| சிங்கம் | பூர்வ புண்ணிய கருமம், வியாபார சிந்தை, முயற்சி தாமதம், பணக்குறைவு. |
| கன்னி | போசன சுகம், சுபசெலவு, புதிய முயற்சி, நண்பர்கள் சந்திப்பு. |
| துலாம் | காரிய சித்தி, பொருள் சேர்க்கை, சயன சுகம், சகோதரர் உதவி. |
| விருச்சிகம் | முயற்சி தாமதம், குடும்பக் கவலை, ரோகநிலை, பண விரயம். |
| தனுசு | உறவினர் சந்திப்பு, நல்ல முயற்சி, சயன சுகம், போசன சுகம். |
| மகரம் | சுபசெலவு, வேலைச்சுமை, காரிய அலைச்சல், போசன சுகம். |
| கும்பம் | தெய்வ சிந்தை, காரிய அனுகூலம், பெரியோர் உதவி, போசன நன்மை. |
| மீனம் | முயற்சி கைகூடும், நல்ல செய்தி, அதிக பிரயாசை, நண்பர்கள் சந்திப்பு. |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் |
|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 130 |
| உருளைக்கிழங்கு | 140 | 130 |
| பச்சைமிளகாய் | 400 | 500 |
| தக்காளி | 400 | 600 |
| அவரை | 30 | -- |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 80 |
| கோவா | 130 | 120 |
| கரட் | 100 | 140 |
| பூசணி | 80 | 80 |
| புடோல் | 50 | 60 |
| வாழைக்காய் | 140 | --- |
| சின்ன வெங்காயம் | 180 | 120 |
| பெரிய வெங்காயம் | 140 | 180 |
| பாகற்காய் | 140 | 140 |
| வெண்டிக்காய் | 80 | 80 |
| கரணைக் கிழங்கு | 40 | -- |
| பயிற்றங்காய் | 140 | 170 |
| லீக்ஸ் | 150 | 140 |
| போஞ்சி | 160 | 140 |
| கீரை – 1 பிடி | 20 | 20 |
| தேசிக்காய் | 100 | 130 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 30 |

(7)



இலங்கை வங்கியின் BOC ஸ்மார்ட் இன்வெஸ்ரர் கணக்கு அறிமுகவைபவம் யாழ். அதி மேற்தரக் கிளையில் இடம்பெற்றது. இலங்கை வங்கியின் வடமாகாண உதவிப் பொது முகாமையாளர் ந.சிவரட்ணம் வாடிக்கையாளர் எஸ்.சிறிஸ்கந்தராஜாவிற்கு சான்றிதழ் வழங்கி ஆரம்பித்து வைப்பதையும் முகாமையாளர் க.ப. ஆனந்த நடேசன் மற்றும் வாடிக்கையாளர் சேவை முகாமையாளர் வே. சிவபாலன் ஆகியோர் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம்.

## அபிராமிப்பட்டர் விழா

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தில் அபிராமிப்பட்டர் விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு விசேட பூசையுடன் ஆரம்பமாக உள்ளது.

தொடர்ந்து அபிராமி அந்தாதி ஓதல், பட்டர் எழுந்திருக்கும் உறித் தரிசனம், பட்டருக்கு அம்பாள் காட்சி கொடுத்தல், பூரணை நிலவுத் தரிசனம் ஆகியன இடம்பெறும்.

5 மணிக்கு வசந்த மண்டப்பூசை இடம் பெற்று அம்பாளுடன் அபிராமிப்பட்டர் திருவீதியுலாவும் இடம்பெறவுள்ளது. (ஓ-4)

## 'மனிதம்' குறும்பட வெளியீடும் கலைஞர்கள் கௌரவிப்பும்

(யாழ்ப்பாணம்)

ஜீசஸ் கலைக்கூடம் நடத்தும் 'மனிதம்' குறும்பட வெளியீடும் கலைஞர்கள் கௌரவிப்பும், சிறப்புப் பரத நாட்டியமும் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக உடுவில் பிரதேச செயலர் திருமதி மஞ்சுளா தேவி சதீஸன், சிறப்பு விருந்தினராக சிவகுமார், கௌரவ விருந்தினராக கியூடெக் கரித்தாஸ் நிர்வாக உத்தியோகத்தர் எ.ஆர்.திலகரட்ணம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஓ-4)

## முன்பள்ளி ஆசிரியர்களுக்கான முகாமைத்துவப் பயிற்சிப் பட்டறை

(சில்லாலை)

வட்டுக்கோட்டை அபிவிருத்தி நிறுவனத்தின் ஏற்பாட்டில் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான இடர்முகாமைத்துவப் பயிற்சிப் பட்டறை இன்று சனிக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 4.30 மணிவரை வட்டுக்கோட்டை அபிவிருத்தி நிறுவனப் பயிற்சிக் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இப் பயிற்சிப் பட்டறை இரண்டாவது முறையாக சங்கானைப் பிரதேச செயலர் பிரிவிற்கு உட்பட்ட 75 முன்பள்ளிகளில் உள்ள ஆசிரியர்கள் அடங்கிய ஒரு தொகுதிக்கு நடாத்தப்படவுள்ளது.

யாழ். கிறிஸ்தவ உதவி நிறுவனத்தின் அனுசரணையுடன் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம அதிதியாக சங்கானைப் பிரதேச முன்பள்ளி இணைப்பாளர் செல்வி நிர்மலா கலந்துகொள்ளவுள்ளார். (ஓ-58)

## அரச ஊழியர்களுக்கிடையிலான ஆக்கத்திறன் போட்டித் தொடர்-2009

(யாழ்ப்பாணம்)

கலாசார அலுவல்கள் மற்றும் தேசிய மரபுரிமை அமைச்சினால் வருடாந்தம் ஒழுங்கமைப்படுகின்ற அரச ஊழியர்களுக்கிடையிலான ஆக்கத்திறன் போட்டித் தொடர் 2009 ஆம் ஆண்டும் நடாத்தப்படவுள்ளது.

அந்த வகையில் அரச மற்றும் அரசுடன் இணைக்கப்பட்ட நிறுவனங்களில் கடமை புரியும் இலக்கிய, கலைத்துறையில் ஆர்வமுள்ள ஊழியர்களினது ஆக்கத் திறனை வெளிக்கொணர்ந்து அவற்றை ஊக்குவித்து அவர்களை சமூகத்திற்கு அறிமுகப்படுத்தி அவற்றின் ஊடாக பயன்தரக் கூடியதொரு அரச சேவையை உருவாக்குவதே இதன் பிரதான நோக்கமாகும்.

அதன் பொருட்டு பாடல், கவிதை, சிறுகதை, சிறுவர் கதை, குறுநாடகம் மற்றும் சித்திரம் என ஆறு பிரிவுகளில் இப் போட்டி நடாத்தப்படவுள்ளது.

இப்போட்டிக்கான ஆக்கங்கள் யாவும் *ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதியன்றோ அதற்கு முன்னரோ செயலாளர், கலாசார அலுவல்கள் மற்றும் தேசிய மரபுரிமைகள் அமைச்சு, 8 ஆவது மாடி, செத்சிரிபாய, பத்தரமுல்ல.* என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

இவை பற்றிய மேலதிக விபரங்களை நல்லூர் பிரதேச செயலக கலாசார அபிவிருத்தி உதவியாளரிடம் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம் என நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் அறிவித்துள்ளார்.

இதேவேளை, யாழ். பிரதேச செயலர் மரியதாசன் ஜெகூ யாழ். பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட அரச ஊழியர்கள் இது தொடர்பான விபரங்களை யாழ். பிரதேச செயலக விளம்பரப் பலகையில் பார்வையிடலாமென அறிவித்துள்ளார். (ஓ)

## அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் புடவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கிழக்கு இருபாலை வீதியில் அமைந்துள்ள யாழ்.மாவட்ட புடவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் இயங்கி வருகின்றது.

மூலப் பொருள் இன்மை, நிதித் தட்டுப்பாடு, ஊழியர்களுக்கான சம்பளக் குறைவு, யாழ். புடவை வியாபார நிலையங்களின் பாராமுகம் போன்ற பிரச்சினைகளை நீண்டகாலமாக சங்கம் எதிர்கொள்வதாக சங்கத்தின் பொது முகாமையாளர் க.ஜெயக்குமார் தெரிவித்துள்ளார்.

1990களில் விடுதிகளில் தங்கியிருந்து 600 பேர் வரை இருநேர வேலைகள் செய்தனர். தற்போது 23 பேர் கடமையில் இருக்கின்றனர்.

புடவை நெசவாளர் சங்கத்தின் வியாபார நிறுவனங்களும் உற்பத்திக் குறை வால் மூடப்பட்டுள்ளன.

கட்டட வசதி, இயந்திரங்களை மீள இயக்குதல், வாகனவசதி, சந்தைவாய்ப்பு, ஜெனரேட்டர் மின் வசதி என்பன ஏற்படுத்தி தரப்படும் பட்சத்தில் உள்ள வளங்களையாவது பாதுகாக்க முடியும் என யாழ்.மாவட்ட புடவை நெசவாளர் சங்கப் பொது முகாமையாளர் கேட்டுள்ளார். (ஓ-36)

## கும்பாபிஷேக தின அருள்விழா

மருதனார்மடம் அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோயில் கும்பாபிஷேக தின அருள்விழா 31ஆம் திகதி சனிக்கிழமை காலை 7.30 மணிக்கு சங்கற்பத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து சங்குபூஜை, மங்கள அபிஷேகம், 1008 சங்காபிஷேகம், சனீஸ்வர பகவான் நவகலச அபிஷேகம், உபசார பூஜை, சீதாராம கல்யாண வைபோகம் ஆகியன இடம்பெற்று 12.30 மணிக்கு மங்கல உலா நிகழ்வு இடம்பெறவுள்ளது. (ஓ-4)

## திருக்குறள் மனனம் பண்ணிசைப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையால் நடத்தப்படும் புண்ணிய நாச்சியம்மையார் தினம் பெப்ரவரி மாதம் 19 ஆம் திகதி சைவ பரிபாலன சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் சிறப்பாக நடைபெறவுள்ளது. இத் தினத்தையொட்டிய பண்ணிசைப்போட்டி, திருக்குறள் மனனப் போட்டியும் பாடசாலை மட்டத்தில் பெப்ரவரி 4ஆம் திகதி புதன்கிழமை அன்று யாழ். இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக சைவபரிபாலன சபை தேர்வுச் செயலர் இரா.செல்வவடிவேல் அறிவித்துள்ளார். (ஓ)

## திருப்பாலத்துவ சபைத் தினம்

(ஊர்காவற்றுறை)

கத்தோலிக்க திருச்சபையின் சிறுவர்களுக்கான 'திருப்பாலத்துவ சபை' வருடாந்த தின விழா நாளை ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்படவுள்ளது. அன்றைய தினம் காலை 6.30 மணிக்கு திருப்பலியும் இடம்பெறவுள்ளது. நச்சி என்ற கிராமத்தில் 1943 ஆம் ஆண்டு திருப்பாலத்துவ சபை ஆரம்பிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (ஓ-72)

## உள்ளூராட்சி மறுசீரமைப்பு செயற்பாடுகள்

(சாவகச்சேரி)

உள்ளூராட்சி சபைகளில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள உள்ளூராட்சி மறுசீரமைப்பு செயற்பாடுகளில் இவ் வருட காலாண்டில் குறிப்பிட்ட சில செயற்பாடுகளிற்கு முன்னுரிமை கொடுத்து செயற்படுமாறு சகல பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்களையும், மாநகர சபை ஆணையாளர்களையும் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் கேட்டுள்ளார்.

ஓய்வுபெறும் அல்லது இறந்தும் இதுவரை ஓய்வூதியம் அல்லது விதவை, அநாதை ஓய்வூதியம் பெறாதோர் விபரம், ஓய்வூதியக் கோவைகள் உரிய திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டும் இதுவரை ஓய்வூதியம் கிடைக்கப்பெறாதோர் விபரம், புதிய நியமனங்களில் இதுவரை அறிக்கையிடப்படாதோர் விபரம், இதுவரை உள்ளீர்ப்புக் கடிதங்கள் கிடைக்கப் பெறாதோர் விபரம் ஆகியவற்றை உடனடியாகவும் இதுவரை விதவை அநாதை ஓய்வூதியங்களிற்கு விண்ணப்பிக்காதவர்களினது விண்ணப்பங்களை அனுப்பிவைத்து அதுபற்றிய அறிக்கையையும் இவ் வருடம் ஓய்வுபெறுவோரின் விபரங்களையும் 30.01.2009 க்கு முன்பாகவும் அனுமதிக்கப்பட்ட விடுமுறையில் சென்று இதுவரை மீளக் கடமையில் சமுகம் தராதவர்களது விபரங்களை 1.2.2009க்கு முன்பதாகவும் அரச சேவையில் இதுவரை பதவியில் உறுதிப்படுத்தப்படாதோர் விபரங்களை 10.2.2009 இற்கு முன்பதாகவும் சுயவிபரக் கோவைகள் மாகாணப் பொது நிர்வாக சுற்றறிக்கை இல. என்.பி/02/2008 (5) இன் படி முழுமையாகப் பூரணப்படுத்தப்பட்ட அறிக்கையினை 15.2.2009 க்கு முன்னதாகவும் அனுப்பிவைக்குமாறு அறிவித்துள்ளார். (ஓ-29)

## — கொடிகாமம் -யாழ் பஸ் சேவையை —

## ½ மணிநேரம் முன்பதாக சேவையில் ஈடுபடுத்த கோரிக்கை


(சாவகச்சேரி)

கொடிகாமத்திலிருந்து யாழ்ப்பாணம் புறப்படும் 769 ஆம் இலக்க பஸ் சேவையை ½ மணித்தியாலங்கள் முன்பதாக சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் எனப் பொது மக்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

கொடிகாமத்திலிருந்து காலை புறப்படும் முதலாவது பேருந்து காலை 7.15 மணிக்கு பின்னரே யாழ்ப்பாணம் சென்றடைவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனால் கிளினிக் செல்லும் நோயாளர்களுக்கு இலகத்துண்டு கிடைக்காமல் போவதாகவும், வார்ட்டுகளில் இருக்கும் நோயாளர்களை பார்க்க செல்பவர்கள் 7 மணிக்கு பின் செல்ல முடியாதுள்ளதாகவும் இதனால் மதியம் வரை காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

எனவே இ.போ.ச. மற்றும் தனியார் சிற்றூர்தி சங்கத்தினர் இதனைக் கருத்திற் கொண்டு கொடிகாமத்திலிருந்து புறப்படும் முதலாவது பேருந்தை தற்போது புறப்படும் நேரத்திலும் அரை மணி நேரத்திற்கு முன்பதாக சேவையை ஆரம்பித்து உதவுமாறு பொது மக்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (ஓ-6-29)



வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் பாடசாலை அதிபர் திருமதி க.பொன்னம்பலம் தலைமையில் நடைபெற்ற விவேகானந்தர் விழாவில் சுவாமி சித்ரூபானந்தா பாடசாலை மட்டப் போட்டிப் பரீட்சையில் சித்திபெற்ற மாணவி ஒருவருக்கு சான்றிதழ் வழங்குவதையும், அன்றையதினம் தரம் 6 இல் புதிதாகச் சேர்ந்த 230 மாணவர்களுக்கு பால் வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம்.




## இலங்கை வங்கி முகாமைத்துவ பயிலுனர் நியமனம்

இலங்கை வங்கியில் முகாமைத்துவப் பயிலுனர்களைச் சேர்த்துக்கொள்ளும் பொருட்டு யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்குரிய நேர்முகப்பரீட்சை மார்ச் முதலாம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது.

நேர்முகப் பரீட்சைக்குரிய கடிதங்கள் பரீட்சார்த்திகளுக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளதாக வடமாகாண உதவிப் பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார். (ஓ-6)

## கஞ்சா வைத்திருந்தவருக்கு 20 ஆயிரம் அபராதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சின்னக்கடைப் பகுதியில் கஞ்சா வைத்திருந்த நபர் ஒருவரை யாழ் சிறு குற்றப்பிரிவுப் பொலிஸார் நேற்று முன்தினம் கைதுசெய்து யாழ்.நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர்.

இவ்வழக்கினை விசாரணை செய்த யாழ். நீதிவான் ஆர்.வசந்தசேனன் கஞ்சா வைத்திருந்த குற்றத்திற்காக ரூபா 20 ஆயிரம் தண்டப் பணம் விதித்து தீர்ப்பளித்தார். (ஓ-7,14)

# இலங்கையில் தமிழர் 49

### ஆதி இரும்புக் காலம்

இதை ஒத்த போக்குகள் தென்னிந்தியாவிலும் காணப்பட்டன. உண்மையில், ஆதி இரும்புக் காலத்திலும் ஆதி வரலாற்றுக் காலத்திலும், தென்னிந்தியாவும் இலங்கையும் தொடர்ந்து ஒரு பொதுப் பண்பாட்டுப் பிரதேசமாக, பொது வரலாற்றுப் போக்குகள் காணப்பட்ட இடங்களாக இருந்தன. தென்னிந்தியாவிலும் பல இனக்குழுக்கள் மொழியால் இணைந்து பேரினக் குழுக்களாக பரிணாம வளர்ச்சி பெறும் போக்கு ஆதி இரும்புக் காலத்தில் தோன்றியிருந்தது. அது மட்டுமன்றி வேறும் முக்கிய வரலாற்று முன்னேற்றங்கள் இடம்பெறத் தொடங்கியிருந்தன.

இரும்பைப் பயன்படுத்தும் தொழில் நுட்பம், நெற் பயிர்ச்செய்கை மற்றும் நீர்ப்பாசனத் தொழில்நுட்பம் ஆகியவை துரித வளர்ச்சிக்கும் அரசியல், பொருளியல், சமூக மாற்றங்களுக்கும் வழிவகுத்தன.

இப் பின்னணியில் மொழி வளர்ச்சியுடன் கூடவே மொழியைப் பதிவேடுகளிலும் வர்த்தகத்திலும் நன்கு பயன்படுத்தக் கூடிய வகையில் எழுத்து முறை ஒன்று தேவைப்பட்டது. அதன் வளர்ச்சியையும் ஆதி இரும்புக் காலத்தில் காணலாம்.

இலகுவான பதிவுகளைச் செய்வதற்கும் மட்பாண்டங்களில் உடைமையாளரின் பெயர்களை கீறிக் கொள்வதற்கும் பயன்படக் கூடிய ஓர் எழுத்து முறை இக்கட்டத்தில் உருவாகியது. இந்த எழுத்து முறை தென்னாசியாவின் பிற இடங்களில் பயன்படுத்தப்படு முன் தென்னிந்தியா- இலங்கைப் பிராந்தியத்தில் பயன்படுத்தப்பட்டதற்கான சான்றுகள் அண்மைக்காலத்தில் கிடைத்துள்ளன.

### பிராமி எழுத்து முறை

இப்புதிய எழுத்து முறை பிராமி என்ற பெயரை இன்று பெற்றுள்ளது. இது எப்போது தோன்றியது, எவ்வாறு தோன்றியது என்பன போன்ற வினாக்களுக்கு ஆய்வாளர் திட்டவட்டமான விடைகளைக் கூறக் கூடிய நிலையில் இல்லை. கடந்த 170 ஆண்டுகளுக்கு மேலாக மேற்கு ஆசியாவிலும், தென்னாசியாவிலும் தொல்லியலாய்வு பெருமளவு நடத்தப்பட்டிருந்தும், பிராமி எழுத்தின் தோற்றம் பற்றி அதிகம் அறிய முடியவில்லை. இந்த எழுத்துமுறை நன்கு வளர்ச்சியடைந்த நிலையில் திடீரெனத் தோன்றி, தென்னாசியாவின் எல்லாப் பகுதிகளிலும் விரைவாகப் பரவி, பின்னர் வெவ்வேறு பகுதிகளில் வெவ்வேறு அகர வரிசையாக மாற்றம் பெற்று இன்று தென்னாசியாவின் மொழிகளுக்குரிய (உருதுமொழி தவிர) எழுத்து முறைகளைக் கொடுத்துள்ளது.

ஆதி இரும்புக்காலத்தில் தென்னாசியாவில் நடைபெற்ற முன்னேற்றங்களை நோக்குமிடத்து, இத்தகைய ஓர் எழுத்து முறையைத் தென்னாசியாவில் இருந்த ஒரு குழுவினர் உருவாக்கியிருக்கலாம் என்பதை மறுப்பதற்கில்லை. எனினும், வழக்கில் இல்லாது நன்கு வளர்ச்சியடைந்த நிலையில் இந்த எழுத்து முறை காணப்படுவதும், புதிதாக வகுக்கப்பட்டது என்பதைக் காட்டக் கூடிய பரிசோதனை எழுத்துக்களைச் சான்றுகள் கிடைக்கப் பெறாமையும் இந்த எழுத்து வெளியிலிருந்து பெறப்பட்ட செல்வாக்கின் விளைவாக இருக்க முடியும் என்ற கருத்துக்கு இடமளிக்கின்றன.

பிராமி எழுத்தின் தோற்றம் பற்றிப் பல கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் மிகக் கூடுதலாக ஏற்றுக்கொள்ளக் கூடியது இந்த எழுத்து முறையை மேற்கு ஆசிய வணிகர்கள் அறிமுகப்படுத்தினர் என்பது. தென்னாசியாவில் பிராமி எழுத்துப் பயன்படுத்தப்படுமுன் வேறிடங்களில் வழக்கில் இருந்த எழுத்து முறைகளுள் மேற்காசியா, மத்தியதரைச் சமூகங்களின் எழுத்து முறைகளே பிராமி எழுத்துக்களை நெருங்கிய முறையில் ஒத்திருக்கின்றன. இச் சமூகங்களுள் பீனிசியர் என்ற சமூகத்தினரே பிராமி எழுத்தை உருவாக்குவதற்கு உதவியிருக்கலாம் எனத் தோன்றுகிறது. இன்று ஐரோப்பிய மொழிகள் பயன்படுத்தும் எழுத்து முறைகளை உருவாக்க உதவியவர்கள் பீனிசியரே என்ற புகழ் அவர்களுக்கு உண்டு.

இற்றைக்கு 3000 ஆண்டுகளுக்கு முன் மேற்கு ஆசியாவின் ஸைனாய் தீபகற்பத்தில் பயன்படுத்தப்பட்ட சித்திர எழுத்துக்களை இலகுபடுத்தியதன் விளைவாகப் பீனிசியர்களுடைய எழுத்து முறை தோன்றியது என அறிஞர் கருதுவர். இலகுவில் எழுதக் கூடிய 22 மெய்யெழுத்துக்களைக் கொண்ட பீனிசியர் எழுத்து முறை விரைவில் மத்தியதரைச் சமூகங்களிடையே பரவியது. பொ.ஆ.மு. ஒன்பதாம் நூற்றாண்டளவில் மத்திய தரை மொழிகளாகிய ஹீப்ரூ, அம் மொனைட் மற்றும் அரமைக் ஆகிய மொழிகள் பீனீசிய எழுத்துமுறை வழிவந்த எழுத்துக்களைப் பயன்படுத்தின. பின்னர் வேறு ஐரோப்பிய மொழிகளும் பீனிசியர் எழுத்து முறையைப் பின்பற்றிப் புது எழுத்து முறைகளை உருவாக்கின.

பீனீசிய வணிகர், முன்னர் குறிப்பிடப்பட்டது போல்,மேற்கு இந்தியக் கரையோரத் துறைகளில் பொ.ஆ.மு. முதலாம் ஆயிர வாண்டின் வர்த்தகம் நடத்த வந்திருந்தனர் என்று கொண்டால், இந்தியத் துறைகளில் வர்த்தகம் நடத்தியோர் பயன்படுத்தக் கூடிய ஓர் எழுத்து முறையை உருவாக்க அவர்கள் உதவியிருப்பர் எனலாம்.பீனிசியர்,தங்கள் வர்த்தக நடவடிக்கைகளைச் செவ்வனே நடத்த எழுத்து முறை ஒன்றைப் பயன்படுத்துவதைக் கண்ணுற்ற இந்திய வணிகருள் ஒருவரோ பலரோ, பீனிசியர் உதவியைப் பெற்றோ பெறாமலோ, ஓர் இலகுவான எழுத்து முறை 'யை உருவாக்கியிருக்கலாம். இக் காரணத்தினால்,பரிசோதனைக்கு உட்படுத்திச் செம்மைப்படுத்தப்பட்ட எழுத்துக்கள் இல்லாது, இவர்களால் நேரடியாகச் செம்மையான எழுத்துக்கள் உருவாக்கப்பட்டிருக்கலாம். பிராமி எழுத்து வெளியிலிருந்து அறிமுகப்படுத்தப்பட்ட எழுத்தாக அன்றி வெளியிலிருந்து பெறப்பட்ட கருத்தின் விளைவாய் உருவாக்கப்பட்ட எழுத்து எனலாம்.

### பெருமாற்றக் காலம்

இவ்வாறாக மொழி, எழுத்து, தொழில் நுட்பம், பயிர்ச்செய்கை போன்ற முக்கியமான துறைகளில் பெரு முன்னேற்றங்களும் மாற்றங்களும் ஏற்பட்ட காலம் ஆதி இரும்புக் காலம். அரசியல், சமூக, பண்பாட்டு மாற்றங்கள் பல அக்காலத்தில் நிகழ்ந்தன.

பேராசிரியர்
கா. இந்திரபாலா

இடைக்கற்கால மக்கள் இம் மாற்றங்களால் பெரிதும் முன்னேறினர். இதனால் இலங்கை மக்களுடைய வரலாறு தொடக்கம் பெற்றது. இத்தகைய வளர்ச்சியை ஆரியர் வந்து குடியேறியதன் விளைவாகத் தொடங்கிய வரலாறாக இதுவரை வரலாற்றறிஞர் கூறி வந்தமை பொருத்தமற்றது. ஆரியர் என்போர் இலங்கைக்கு வந்து குடியேறினர் என்ற கருத்துக்கு இடமே இல்லை. வெளியிலிருந்து பெருந்தொகையான மக்கள் வந்து குடியேறியதற்கோ முன்வாழ்ந்த மக்கள் அழிக்கப்பட்டமைக்கோ தொல்லியல் சான்றுகள் இல்லை.

(தொடரும்)

# எயிட்ஸ்/எச்.ஐ.வி. அதிகரிப்பை தூண்டக்கூடிய சமகால மாற்றங்களும், தடுப்பதற்கான அணுகுமுறைகளும் 7

விடுதிகள் மற்றும் அனாதை இல்லங்களில் இடம்பெறும் பாலியல் சார்ந்த தகாத உறவுகள் இடம்பெறுதல். குறிப்பாக பாதுகாப்பற்ற உடல் உறவு, ஒன்றுக்கு மேற்பட்டோருடனான உறவு மற்றும் தன்னினச் சேர்க்கை நிகழ்வுகள் இடம்பெறுவதை சுட்டிக் காட்ட முடியும்.

சமகாலத்தில் ஊடகம் மற்றும் தொடர்பாடல் சாதனங்களின் பயன்பாடுகள் அதிகரித்துள்ளன. இளம் வயதினரிடையே ஆபாசப்படம் திரையரங்குகளிலும், இணையவழி மூலமாக கிடைக்கப் பெறுகின்றன. தனியார் கல்வி நிறுவனங்கள், பாடசாலைக்கு அருகில் திரையிடப்படும் படங்களும் பாலியல் சார்ந்த நடவடிக்கைகளை தூண்டுவதாக அமைகிறது.

பாலுறுப்பில் ஏற்படும் காயம், புண், தழும்பு மற்றும் பாலியல் சார் தொற்று ஏற்படின் உடனடியாக வெளிப்படுத்த பயப்படும், வெட்க உளநிலை நோய்த் தொற்று தீவிரமடைந்து ஏனையோருக்கும் பரவக் காரணமாக அமைகிறது. பாடசாலை மட்டத்தில் இடம்பெறும் இடைவிலகல் செயற்பாடு இளவயதினரிடையே தொடர்ச்சியான கல்விச் செயற்பாட்டை தடுப்பதாக அமைகிறது. இதனால் பாலுறவு சார்ந்த அறிவு நிலைப்பட்ட எண்ணங்களைப் பெறுவது குறைவாக உள்ளது. இதனைப் பின்னர் தகாத நடத்தைகளை ஏற்படுத்தி நோய்தொற்றுக்கு உள்ளாகின்றனர்.

### சமகால மாற்றங்கள்
### தடுப்பதற்கான அணுகுமுறைகள்

யாழ்ப்பாண பிரதேச வாழ்வியலின் ஆரோக்கிய நிலையுடன் தொடர்புபட்ட எயிட்ஸ்/HIV நோய் சமகாலத்தில் பரவலடைவதற்கு சமூகத்தில் ஏற்பட்டு வரும் பல்வகைப்பட்ட மாற்றங்களும் அதனூடாக விளைந்த காரணிகளும் முக்கியம் பெறுகின்றன. சமூக கட்டமைப்புக்களில் கூறுகளை தாக்கத்திற்கு உட்படுத்தி ஆரோக்கிய சூழ்நிலையை கெடுப்பதாக அமைகின்றது.

சமூகத்தின் ஆரோக்கிய நிலையை நிலைத்து நிற்கக் கூடிய வகையில் தனிநபர் சார்ந்த ஒழுக்கவியல் மற்றும் நடத்தைகள் ஊடாகவும் சமூகத்தின் முறைசார், முறைசாரா கட்டமைப்பு ஊடாகவும், அரச, அரச சார்பற்ற நலனோன்புத் திட்ட அணுகுமுறையூடாகவும் தடுப்பதற்கான செயல் முறைகளை ஒன்றிணைந்த வகையில் முன்னெடுக்க முடியும்.

- நுண்பாக அணுகுமுறை
- பெரும்பாக அணுகுமுறை

போன்ற முகாமைத்துவ நுட்பங்களைக் கையாண்டு நோய்த் தொற்றுக்களை இனங்கண்டு தரவுகளை பகுப்பாய்வு செய்து முடிவுகளைப் பெற்று தீர்வுக்கான செயல்நிலை அணுகுமுறைகளை உயர் வினைத்திறனுடனும், விளைதிறனுடனும் முன்னெடுக்க முடியும். நேர்த்தியான தலைமைத்துவம், நிர்வாகக் கட்டமைப்பும் பயன்படுபடையும் முகாமைத்துவ செயற்திறன்களும் அணுகு முறைகளை மேம்பாடு அடையச் செய்யும்.

நோய் தொடர்பான தடுப்பு முறைகளைப் பொறுத்த மட்டில் பொதுவான அணுகு முறைகள், சமகாலபிரதேச சூழ்நிலைக்குப் பொருத்தமான அணுகுமுறைகள் என்ற இரு வகைப்படுத்தலுள் உள்ளடக்க முடியும். பின்வரும் விடயங்கள் பொதுவான முறைகளாக அமைகின்றன.

- பாலியல்தொடர்புமூலமான பரவலைத் தடுக்க பாதுகாப்பான உறவுமுறை நம்பிக்கையான துணையுடன் உறவு கொள்ளல், ஆணுறையைப் பயன்படுத்தல், இருவரும் நம்பிக்கையுடன் நடந்துகொள்ளல் சிறந்த வழிமுறையாகும்.
- குருதிமூலம் தொற்றைத் தடுப்பதற்கு HIV தொற்று உள்ளவரிடம் இரத்தம் பெறுவதைத் தவிர்த்தல், முறையான இரத்தப் பரிசோதனை முறைகள், சுகாதாரமான மருத்துவ உபகரண பராமரிப்பு, ஒரு தடவை மட்டும் ஊசியை ஏற்றுவதற்குப் பயன்படுத்தல், ஊசி மூலம் போதைவஸ்தை உடம்பில் ஏற்றும் தகாத செயற்பாடுகளைத் தவிர்த்தல்.
- தாயிடமிருந்து குழந்தைக்குப் பரவுவதை தடுப்பதற்கு கர்ப்பமாவதை தவிர்த்தல், குடும்பத்திட்ட நடைமுறைகளைப் பின்பற்றுதல், தொற்றுக்கெதிரான மருந்துகளை பாவித்து குறைத்துக் கொள்ள முடியும்.

### சுகாதாரப் பணியாளர்கள் பாதுகாப்பான ஆடைகளை அணிதல்

தோலில் உள்ள புண் காயங்களை மறைப்பிலிட்டுப் பேணுதல், மருத்துவ உபகரணங்களை உரிய முறைகளில் சுத்திகரித்தல் மற்றும் உடலில் வைரசு தொற்று ஏற்படக் கூடிய உடற்கூறுகளை இனங்கண்டு நோயாளர்களைப் பராமரிக்க வேண்டும்.

HIV தொற்றுக்கள் 25% - 45% தாய்மாரிடம் இருந்து பிள்ளைகளுக்கு கடத்தப்படுகின்றது. ஆகவே பிள்ளைகளுக்கு தாய்பாலூட்டுவதை தவிர்த்து மாற்றுச் சத்துள்ள உணவை வழங்கல்.

சின்னமுத்து ஊசி, ஏனைய தடுப்பூசிகளை ஏற்றித் தொற்று ஏற்படுவதைத் தவிர்த்துக் கொள்ள முடியும். அத்துடன் ஏனைய பாலியல் சார்ந்த தொற்று நோய்கள் ஏற்படின் உடனடிச் சிகிச்சை பெறுவதுடன் சிகையலங்கரிப்பு நிலையங்களில் புதிய சவர அலகை பயன்படுத்துவதை உறுதிப்படுத்திக் கொள்ளல்.

இவை HIV தொற்றுக்கான பொதுவான அணுகுமுறைகளாகக் கொள்ளப்பட்டாலும் எமது பிரதேச ஆரோக்கிய நிலைக்கும் பொருத்தமானதாக அமைகின்றது. சம காலத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்களும் அதன் நிமித்தம் தீவிரமாகப் பரவலையும் நோய்த் தொற்றைத் தடுப்பதற்கு பின்வரும் விசேட அணுகுமுறைகளை முன்னெடுக்க முடியும்.

HIV /எயிட்ஸினைக் கட்டுப்படுத்துவதற்கு தனி மனித விழிப்புணர்வும், இறுக்கமான குடும்பக் கட்டமைப்பும், நோய் தொடர்பான ஒவ்வொருவரதும் சமூகம் மீதான பொறுப்புணர்வும் முக்கிய அணுகுமுறையாக அமைகிறது.

இதனை ஓர் நோயாக பார்க்காது சமூகப் பிரச்சினையாக அணுகுவதற்கு ஏற்ற மனப்பாங்கையும்,பங்களிப்பையும் ஊக்குவித்தல் பயனுடையதாக அமையும்.

பலவீனமடைந்துள்ள குடிகளுக்கும் அதன் அங்கத்தர்களுக்கும் உடனடி மற்றும் நீண்டகால ஆதரவை வழங்குவதற்கான சமூகத்தை அடியொற்றிய ஒத்தாசைகளை ஒன்று திரட்டி வழங்குதல். அவர்களுக்குத் தேவையான கல்வி,சுகாதாரம்,பராமரிப்பு மற்றும் அத்தியாவசியத் தேவையை கிடைக்கச் செய்தல்.

புலம்பெயர்ந்து மற்றும் வெளியூரிலிருந்து வந்து திருமண உறவை ஏற்படுத்துவோரை பரிசோதனை விசாரணையும், மருத்துவரீதியான பரிசோதனையும் உறுதிப்படுத்தானதாக அமைய வேண்டும்.

பரராஜசிங்கம் இராஜேஸ்வரன்
ஆசிரியர்
யா/சரவணை சின்னமடு றோ.க.த.க.பாடசாலை

வெளியூர்களிலிருந்து வரும் பிரயாணிகளை பிரதேச நுழைவாயில்களில் உட்பிரவேசிக்கும் சந்தர்ப்பங்களில் உடனடி மருத்துவ சிகிச்சைக்கும் உட்படுத்தல் பாதுகாப்பானதாக அமையும். நாட்டின் இறைமையுடன் தொடர்புபட்ட சட்ட திட்டங்களை அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஊடாக விரிவாக்கிக் கொள்ள முடியும்.

கிராமிய,நகர மட்டங்களில் இந் நோய்த் தொற்று தொடர்பான சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தக் கூடிய பரப்புரை, நிகழ்ச்சித் திட்டங்களை எளிய முறையில் முன்னெடுத்தல்.

(தொடரும்)

# அமெரிக்க இராஜாங்க செயலாளராக ஹிலாரியை நியமிக்க செனட் சபை அங்கீகாரம்

அமெரிக்காவின் புதிய இராஜங்க செயலாளராக ஹிலாரி கிளின்டனை நியமிப்பதற்கு செனட்சபை அங்கீகாரம் அளித்துள்ளது.

செனட் சபையில் நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் 94-2 என்ற அடிப்படையில் வாக்குகளை பெற்று இராஜங்க செயலாளராக தெரிவாகியுள்ளார்.

முன்னாள் முதல் பெண்மணியும் ஜனாதிபதி வேட்பாளர் நியமனத்தின் போது பராக் ஒபாமாவின் ஜனநாயகக் கட்சி போட்டியாளருமான ஹிலாரி கிளின்டன், கொண்ட லீஸா ரைஸ் இதுவரை காலமும் வகித்த பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

புஷ்ஷின் அரசாங்கத்தினது வெளிநாட்டு கொள்கைகளிலிருந்து மாறுபட்ட நடைமுறையொன்றை கடைப்பிடிப்பதாக ஹிலாரி கிளின் டன் உறுதியளித்துள்ளார்.



ஹிலாரி கிளின்டனின் மேற்படி நியமனம், செவ்வாய்க்கிழமை பராக் ஒபாமாவின் ஜனாதிபதி பதவியேற்புக்குப் பின் இடம்பெறும் என முன்பு எதிர்பார்க்கப்பட்டது.

எனினும், குடியரசு கட்சியைச் சேர்ந்த ஒருவரால் தெரிவிக்கப்பட்ட எதிர்ப்பையடுத்து செனட் சபை வாக்கெடுப்புக்காக அந் நியமனம் ஒத்திவைக்கப்பட்டது. (ஓ-6)

# பிரிட்டன் மீது தாக்குதல் நடத்த அல்-கொய்தா தலைவர் அழைப்பு

(துபாய்)

காசாவில் இஸ்ரேல் படைகள் நடத்திய தாக்குதலுக்கு பதிலடியாக மேற்கத்திய நாடுகளில் குறிப்பாக பிரிட்டனில் தாக்குதல் நடத்துங்கள் எனப் பயங்கரவாதிகளுக்கு அல்கொய்தா அமைப்பின் முக்கிய தலைவர் அழைப்பு விடுத்துள்ளார். அல்கொய்தா அமைப்பின் முக்கிய தலைவர்களில் ஒருவர் அபு யாப்யா அல்-லிபி.

கடந்த 2005 ஆம் ஆண்டில் பிரிட்டனில் நிகழ்ந்த மோசமான குண்டு வெடிப்புக்களுக்கு இவரே காரணம் என நம்பப்படுகிறது.

இவர் தற்போது பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் இடையேயான எல்லைப் பகுதியில் தங்கியிருக்கலாம் என நம்பப்படுகிறது.

இவரின் பேச்சுக்கள் அடங்கிய வீடியோக் காட்சி இணையத்தளம் ஒன்றில் வெளியிடப்பட்டுள்ளது.

அதில், "இஸ்ரேல் உருவாக காரணமாக இருந்த நாடு பிரிட்டன். அதனால், காசா பகுதியில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலுக்குப் பதிலடியாக, மேற்கத்திய நாடுகளில் குறிப்பாக பிரிட்டனில் தாக்குதல் நடத்த வேண்டும். பிரிட்டன் நாடு செய்த வரலாற்றுத் தவறுக்கு அது பெரிய விலை கொடுக்க வேண்டும். இஸ்ரேல் என்ற நாடு உருவாகி இருக்காவிட்டால், பாலஸ்தீனத்தில் எந்தக் குழந்தையும் இறந்திருக்காது" என்று கூறியுள்ளார். (ஓ-6)

## அமெரிக்காவில்

# சட்டபூர்வமாக குடியேறுபவர்கள் தொகையை அதிகரிக்க திட்டம்

(வோஷிங்டன்)

அமெரிக்க அதிபர். பராக் ஒபாமாவின் புதிய குடியேற்றக் கொள்கை, அமெரிக்காவில் குடியேற விரும்பும் வெளிநாட்டவர்களுக்கு சாதகமாக அமையும் எனக் கருதப்படுகிறது.

அமெரிக்காவில் சட்டபூர்வமாகக் குடியேறுபவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க ஒபாமா நிர்வாகம் முடிவு செய்துள்ளது.

புதிய அமெரிக்க அரசின் குடியேற்றக் கொள்கை வரைவுத் திட்டத்தை வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ளது. அதில், சட்டபூர்வமாகக் குடியேற விரும்புவோரின் எண்ணிக்கையை அதிகரிக்க ஒபாமா நிர்வாகம் முடிவு செய்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போது உள்ள குடியேற்றக் கொள்கையில் உள்ள குளறுபடிகளைக் களைந்து அதிலுள்ள அரசியலை நீக்கி, முழுமையான தீர்வைத் தர முடிவு செய்யப்பட்டுள்ளது.

குடியேற்ற நாடு என்ற அமெரிக்காவின் பாரம்பரியத்தை சிதைக்காத வகையில் புதிய குடியேற்றக் கொள்கை அமையவுள்ளது.

அதேபோன்று சட்டவிரோதமாக அமெரிக்காவில் குடியேறுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும், அவர்களை வேலைக்கு அமர்த்துவோர் மீதும் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப் படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-6)



இரண்டாம் உலகப் போரின் பிற்பாடு 1945 ஆம் ஆண்டு கொல்லப்பட்ட 1800 ஜேர்மனிய பொதுமக்களின் சடல எச்சங்களைக் கொண்ட பாரிய புதைகுழி வட போலந்திலுள்ள மால்போர்க் நகரில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

# ஒபாமா முழுமையாக உண்மையுள்ள ஒரு மனிதராக தோற்றமளிக்கிறார்

## கியூபா முன்னாள் ஜனாதிபதி பிடெல் காஸ்ட்ரோ

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா முழுமையான உண்மையுள்ள ஒரு மனிதராக காணப்படுவதாக கியூப முன்னாள் ஜனாதிபதி பிடெல் காஸ்ட்ரோ கூறியதாக ஆர் ஜென்டீன ஜனாதிபதி கிறிஸ்டினா பெர்னாண்டஸ் தெரிவித்தார்.

கியூபாவில் பிடெல் காஸ்ட்ரோவுடனான சந்திப்பின் பிற்பாடு ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஒபாமாவின் பதவியேற்பு வைபவத்தை தொலைக்காட்சியில் பிடெல் காஸ்ட்ரோ பார்த்தாக கூறிய கிறிஸ்டினா, பிடெல் ஒபாமாவை மிகவும் நம்புகிறார் என்று கூறினார்.

"நான் பிடெலுடன் சுமார் ஒரு மணித்தியாலத்தை செலவிடடேன். அவர் என்னுடன் கலந்துரையாடினார். அவர் மிகவும் நன்றாக உள்ளார்" என அவர் மேலும் தெரிவித்தார்.

"ஒபாமாவின் பதவியேற்பு வைபவம் முழுவதையும் தொலைக்காட்சியில் பார்த்ததாகவும் தனக்கு அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா குறித்து மிகவும் நல்ல அபிப்பிராயம் ஏற்பட்டுள்ளதாகவும் பிடெல் என்னிடம் கூறினார்" என்று குறிப்பிட்டார்.

பராக் ஒபாமா பற்றி பிடெல் காஸ்ட்ரோ விபரிக்கையில்,

"அவர் முழுமையான உண்மையுள்ள மனிதராக தோன்றுகிறார். தனது திட்டங்களிலும் அவற்றை முன்னெடுத்துச் செல்வதிலும் அவர் மிகுந்த நம்பிக்கை வைத்துள்ளார்" என்று தெரிவித்துள்ளார்.

அதே சமயம் பிடெல் காஸ்ட்ரோவின் சகோதரரும் கியூப ஜனாதிபதியுமான ராவுல் காஸ்ட்ரோ, பிடெலின் உடல் நிலை குறித்து பரவி வரும் வதந்திகளுக்கு கண்டனம் தெரிவித்துள்ளார்.

"அவர் மரணப் படுக்கையிலிருந்தால் என்னால் எவ்வாறு இங்கு புன்னகையுடன் வலம் வர முடியும். அவர் சிந்தனை செய்வதிலும், வாசிப்பதிலும், எனக்கு ஆலோசனை கூறுவதிலும், உதவி செய்வதிலும் தனது நாட்களைச் செலவிட்டு வருகிறார். அவர் மிகவும் நன்றாக இருக்கிறார்" என ராவுல் காஸ்ட்ரோ கூறினார். (ஓ-6)

# மனித தசையின் சமிக்ஞைகளை உணர்ந்து இயங்கும் செயற்கை கரம்

## ஸ்கொட்லாந்து இளைஞனுக்கு வெற்றிகரமாக பொருத்தப்பட்டது



செயற்கைக் கரத்தை பயன்படுத்தி நீர் அருந்தும் இவான்

மூன்று வருடங்களுக்கு முன்பு விபத்தொன்றில் இடது கையை இழந்த இளைஞன் ஒருவனுக்கு உலகின் அதிமுன்னேற்றகரமான தொழில்நுட்பங்களை உள்ளடக்கி வடிவமைக்கப்பட்ட செயற்கைக் கரம் வெற்றிகரமாகப் பொருத்தப்பட்டுள்ளது.

மேற்படி செயற்கைக் கரமானது அது பொருத்தப்பட்ட மனித தசைப் பகுதியிலிருந்து கிடைக்கப் பெறும் சமிக்ஞைகளை துல்லியமாக உள்வாங்கி, அதற்கேற்ப செயற்படக் கூடிய நுண்ணிய உணர் கருவிகளைக் கொண்டமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவான் ரெனோல்ட்ஸ் (19 வயது) என்ற மேற்படி இளைஞருக்கு இந்த செயற்கை கரம் பொருத்தப்பட்டு ஒருசில நிமிடங்களிலேயே அவரால் அதனை தனது சொந்தக் கை போன்று பயன்படுத்த முடிந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்கு இங்கிலாந்து பல்கலைக்கழக மாணவரான ரெனோல்ட்ஸ் தனது நண்பருடன் காரில் பயணம்செய்தவேளை காரின் ஜன்னல் வழியாக கையை வெளியே நீட்டிய போது. அது நுழைவாயில் கம்பம் ஒன்றில் மோதி துண்டிக்கப்பட்டது.

ஸ்கொட்லாந்தைச் சேர்ந்த 'டச் பயோனிக்ஸ்' கம்பனியால் தயாரிக்கப்பட்ட இந்த செயற்கை கரத்தின் விலை 15ஆயிரம் அமெரிக்க டொலர் ஆகும். இந்த செயற்கைக் கரம் கடந்த ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்ட 50 முன்னணி கண்டுபிடிப்புக்களில் ஒன்றாக 'டைம்' சஞ்சிகையால் பட்டியல்படுத்தப்பட்டதுடன், புதிய கண்டுபிடிப்புக்கான விருதுகள் பலவற்றையும் வென்றெடுத்துள்ளது. (ஓ-6)

# கலப்பட பால் பவுடர் வழக்கில் இருவருக்கு மரண தண்டனை !

(சிஜியாசுவாங்)

சீனாவில் கடந்தாண்டு எழுந்த கலப்பட பால் பவுடர் பிரச்சினை வழக்கில், இருவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. சீனாவில் கடந்தாண்டு பால்பவுடரில் மெலமைன் இரசாயனம் கலப்படத்தால் பெரும் பிரச்சினை ஏற்பட்டது.

இந்த கலப்பட பால் பவுடரை குடித்த மூன்று இலட்சத்துக்கும் மேற்பட்ட குழந்தைகள் பாதிக்கப்பட்டனர். ஆறு குழந்தைகள் உயிரிழந்தனர். இந்தக் கலப்பட பால் புவுடர் தயாரித்ததில் முக்கியமான சன்லூ நிறுவனத்தைச் சேர்ந்த இடைத் தரகர் உட்படப் பலர் மீது வழக்கு நடந்தது.

இதற்கிடையில் பாதிக்கப்பட்ட பெற்றோரின் கோபம் சன்லூ நிறுவன முன்னாள் மேலாளர் தியான் வென்குவா மீது திரும்பியது. சன்லூ நிறுவன முன்னாள் மேலாளர் தியான் வென்குவாவிற்கு ஆயுள் தண்டனை மற்றும் 14 கோடியே 40 இலட்சம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது.

கலப்பட பால் பவுடர் தொடர்பாக சிஜியாசுவாங் நீதிமன்றில் நேற்று முன்தினம் நடந்த வழக்கு பற்றி நீதிமன்றத் தரப்பில் கூறியதாவது, கலப்பட பால்பவுடர் வழக்கில் இருவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. அதில் ஒருவர் சாங் யூஜின். இவர் 2007 ஆம் ஆண்டு ஒக்டோபர் முதல் 2008 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வரை 600 டன் அளவிலான மெலமைன் கலந்த் புரோட்டின் பவுடர் தயாரித்து விற்றவர்.

மரண தண்டனை விதிக்கப்பட்ட மற்றொருவர் பவுடரை வாங்கி அதை பண்ணையாளர்களிடம் இருந்த பெற்ற பாலில் கலந்து பின் சன்லூ நிறுவனத்திடம் விற்ற இடைத் தரகர்களில் ஒருவர். இதைத் தவிர மூன்றாவதாக ஒரு நபருக்கு மரண தண்டனை ரத்து செய்யப்பட்டு, ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. மேலும் இந்த கலப்பட பால்பவுடர் குற்றத்தில் தொடர்புடைய 21 பேருக்கு நேற்று முன்தினம் மதியத்திற்கு மேல் தீர்ப்பளிக்கப்பட்டது. (ஓ-6)

# படகு கவிழ்ந்ததில் இலங்கையர் இருவர் உட்பட 12 பேரை காணவில்லை

நெதர்லாந்து பிராந்தியத்திலிருந்து பிரித்தானிய வேர்ஜின் தீவுகளை நோக்கி 25 சட்டவிரோத குடியேற்றவாசிகளுடன் பயணித்த படகு கவிழ்ந்ததில் இரு இலங்கையர்கள் உட்பட 10 பேர் காணாமல் போயுள்ளனர்.

இந்நிலையில், காணாமல் போனவர்களைத் தேடி மீட்புப் பணியாளர்கள், படகுகள் மற்றும் உலங்கு வானூர்தியைப் பயன்படுத்தி தேதடி வருகின்றனர்.

அளவுக்கதிகமான பயணிகளை ஏற்றிச் சென்றமையே படகு விபத்துக்குக் காரணமெனத் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-6)

# முல்லைத்தீவு வைத்தியசாலைகள் காயமடைந்தவர்களால் நிரம்பி வழிகின்றது

மோதல்கள் தீவிரமடைந்துள்ள முல்லைத் தீவு மாவட்டப் பகுதிகளில் அநேகமாக சகல இடங்களில் எறிகணைத் தாக்குதல்கள் நடத்தப்படுவதாகவும் இதனால் வைத்தியசாலைகளுக்குக் காயமடைந்தவர்கள் வந்த வண்ணம் இருப்பதாகவும் வன்னித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எறிகணைத் தாக்குதல்களில் காயமடைந்தவர்களினால் வைத்தியசாலைகள் நிறைந்து வழிவதாகவும் இவர்களுக்கான வைத்திய சேவையை வழங்குவதில் அங்கு குறைந்த எண்ணிக்கையில் கடமையில் உள்ள வைத்தியர்கள் சிரமப்படுவதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, எறிகணை தாக்குதல் நடத்தப்படும் இடங்களில் இருந்து மக்கள் பாது காப்பான இடங்களை நாடி பாதுகாப்பு தேடி ஓடிக் கொண்டிருப்பதனால் எறிகணை வீச்சில் கொல்லப்பட்டவர்கள் மற்றும் படு காயமடைந்து வைத்தியசாலைக்கு வந்த பின்னர் உயிரிழப்பவர்களில் பலரது சடலங்களை உறவினர்கள் வந்து பொறுப்பேற்காத நிலைமையும் வைத்தியசாலைகளில் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இறந்தவர்கள் சரியான முறையில் உறவினர்களினால் அடையாளம் காணப்படாத காரணத்தினால் அந்தச் சடலங்களை கையளிக்க முடியாமலும் அவற்றை அரச செலவில் அடக்கம் செய்ய முடியாத நிலைமையும் காணப்படுகின்றது. இதனால் வைத்தியசாலை அதிகாரிகள் இக்கட்டான நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகவும் வன்னியில் உள்ள சுகாதாரத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ஓ)

# நல்லூர் றோட்டறக்ட் கழகத்தின் "மனிதம்" சஞ்சிகை வெளியீடு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் றோட்டறக்ட் கழகத்தினால் வருடந்தோறும் வெளியிடப்படும் மனிதம் சஞ்சிகையின் 8 ஆவது இதழ் வெளயீடு இன்று காலை10.30மணிக்கு கலட்டி, சீனியர் ஒழுங்கையில் அமைந்துள்ள மாநாட்டு மண்டபத்தில் Rtr.சாருமதி தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ். றோட்டறக்ட் கழக அனுசரணையுடன் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.றோட்டறக்ட் கழகத் தலைவர் Rtr.PP.K. சுரேந்திரன், கௌரவ விருந்தினர்களாக நல்லூர் பிரதேச செயலர் ப. செந்தில் நந்தன், விவசாயத் திணைக்கள உதவி ஆணையாளர் பற்றிக் டிறஞ்சன்ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.. (ஓ-6)

# வண்ணையில் தேரேறி வருகிறாள் துர்க்கை!

இன்று சனிக்கிழமை வண்ணை வீரமாகாளியம்பாள் ஆலயத்தில் துர்க்கையம்மன் தேர்த்திருவிழா

தேரேறி வண்ணையிலே
வருபவளே!
தேசநலன் காத்தருள
வேண்டுமம்மா!
போரோய வேண்டுமிங்கே
துர்க்கையம்மா
புது வாழ்வை யாவருக்கும் அருள
வேண்டும்
ஆரோடு நோவமினி
துர்க்கையம்மா
அன்பர்களை காத்தருள
வேண்டுமம்மா
வேரோடு துயரறுப்பாய்
துர்க்கையம்மா
விடிவதனை தந்தருள
வேண்டுமம்மா

மதுர கவி. காரை.
எம்.பி அருளானந்தன்.

## கொமர்ஷல் வங்கி

# ஆண்டின் சிறந்த வங்கியாக ஏழாவது தடவையாகத் தெரிவு

இந்நாட்டின் முன்னணி தனியார்துறை வங்கியான கொமர்ஷல் வங்கி மீண்டும் ஒரு முறை இலங்கையின் "2008 ஆம் ஆண்டுக்கான சிறந்த வங்கி" என சர்வதே வங்கியியல் சமூகத்திற்கு சேவைபுரியும் பிரசித்தி பெற்ற, ஐக்கிய ராச்சியம் கொண்ட "த பாங்கர்" சஞ்சிகையினால்பிரகடனம்செய்யப்பட்டுள்ளது.

சர்வதே வங்கியியல் துறையில் "ஒஸ்கார்" விருதாகக் கருதப்படும் இந்த விருதை கொமர்ஷல் வங்கி, மேற்படி சஞ்சிகையினால் நடத்தப்பட்ட ஒன்பது விருது வழங்கல் நிகழ் வுகளில் இத்துடன் ஏழு தடவைகள் வென்றுள் ளது.

வங்கிகளினால் பதில்கள் வழங்கப்படும் விரிவான வினாக் கொத்துகளின் அடிப்படையில் ஆண்டுக்கான சிறந்த வங்கி விருதுக்குரிய மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த ஆண்டு 150 நாடுகளிலிருந்து 740 வங்கிகள் வினாக்கொத்துக்களுக்கான பதில்களை "த பாங்கர்" சஞ்சிகையின் ஆசிரிய குழுவுக்குச் சமர்ப்பித்திருந்தன. இச் சஞ்சிகை 2008 ஆம் ஆண்டுக்கென உலகளாவிய வெற்றியாளர்களுக்கு 160 'பிரக்கன்' விருதுகளை வழங்கியது.

"ஒரு குழப்பகரமான சூழலில் கொமர்ஷல் வங்கி மிகச் சிறந்த நடைமுறை மற்றும் ஸ்திரத்துக்கு ஒரு முன்மாதிரியாக விளங்குவதை இந்த விருத தகுந்த வேளையில் மீண்டும் உறுதி செய்துள்ளது" என்று கொமர்ஷல் வங்கியின் முகாமைத்தவப் பணிப்பாளர் அமித குணரத்ன குறிப்பிட்டார்.

"சில நிதி நிறுவனங்களில் பொது மக்களின் நம்பிக்கை தளர்ச்சியடைந்துள்ளது, ஆயினும் கொமர்ஷல் வங்கியின் உறுதியானது மீண்டும் மீண்டும் உறுதிசெய்யப்பட்டுள்ளது. வெளியிடும் கருத்துகளுக்கு மிகுந்த பெறுமதியைப் பெறும் ஒரு சுயாதீனமான சர்வதேச சஞ்சிகையின் இந்த நிய மனம், வங்கிக்குக்கிடைத்த விருதுகளில் மிகச் சமீபமானதாகும்" என்று அவர் மேலும் தெரிவித்தார்.

ஆண்டின் சிறந்த வங்கி விருதானது, மிக அண்மைய பெறுபேறுகள், வளர்ச்சி வீதங்கள் மற்றும் செயற்பாட்டு தரவுகளை வினாக் கொத்துக்குரிய காலத்திற்கு பிரதிபலிப்பது மட்டுமல்லாமல் தொழில்நுட்பம், சுவீகரிப்புகள் மற்றும் தந்திரோபாய அபிவிருத்திகள் உள்ளிட்ட பெறக்கூடிய அனைத்து விடயங்களின் ஓர் ஆய்வாகவும் அமைகின்றது.

ஒவ்வொரு நாட்டிலும் மிகச்சிறந்த வங்கிக்கான விருதானது, செயற்பாட்டு பிரமாணம், தரம் வாய்ந்த சாதனைகள் மற்றும் கேந்திரமான முன்னோடி முயற்சிகள் ஆகியவற்றை இணைத்த மிகச்சிறந்த பல்வகை செயற்பாட்டுக்குரியதாகும்.

இவ்வாண்டின் "பிரக்கன்' விருதுகளில் BNP பரிபாஸ் 2008 ஆண்டுக்கான உலக வங்கி விருதை வென்றது. பிராந்திய விருது வெற்றியாளர்களாக, ஆசியாவுக்கு ICBC, மேற்கு ஐரோப்பாவுக்கு BNP பரிபாஸ், மத்திய கிழக்கு ஐரோப்பாவுக்கு ரைபேய்சன் இன்டர் நஷனல், லத்தீன் அமெரிக்காவுக்கு பாங்கோ சன்ராண்டர், மத்திய கிழக்கிற்கு குவைத் த நஷனல் வங்கி, ஆபிரிக்காவுக்கு ஸ்ரான்டர்ட் வங்கி ஆகியவை விளங்கின.

நாட்டு விருது வெற்றியாளர்களில் கொமர்ஷல் வங்கியுடன், இந்திய ஸ்டேட் வங்கி, ICBC (சீனா), HSBC (ஹொங்கோங்), HSBC குழுமம் (ஐக்கிய இராச்சியம்), JP மோர்கன் (அமெரிக்கா), DBSவங்கி (சிங்கப்பூர்), BNP பரிபாஸ் (பிரான்ஸ்), கொமர்ஸ்பாங் (ஜெர் மனி), பாகிஸ்தான் நஷனல் வங்கி மற்றும் பப்ளிக் வங்கி (மலேசியா) ஆகியவை இடம் பெற்றன.

1969 இல் நிறுவப்பட்ட கொமர்ஷல் வங்கி, நுகர்வோர் வங்கியியல், திறைசேரி மற்றும் பிணைகள் சந்தைகளில் செல்வாக்கு மிக்க நிலைகளுடன் இலங்கையின் முன்னணி வங்கியாகத் திகழ்கின்றது. இவ்வங்கி 170 கணனி இணைப்பிலான கிளைகள், சுப்பர் மார்கெட் வங்கியியல் கருமபீடங்கள் சேவை நிலையங்கள் மற்றும் 335 ATM களை கொண்ட வலையமைப்பினை இலங்கையில் சொந்தமாக வைத்துள்ளது.

அண்மையில், உலகின் உச்சநிலையான 1000 வங்கிகளில் நிதியியல் ஸ்திரத்தன்மையில் உலகில் 155 ஆவது இடத்திலுள்ள வங்கியாகவும் "த பாங்கர்" சஞ்சிகையினால் தரச் சிறப்பு வழங்கப்பட்டது.



அமெரிக்கா வைத்தளமாகக் கொண்ட "குளோபல் பினான்ஸ்' சஞ்சிகையினால் இலங்கையில் "மிகச் சிறந்த வங்கி" யெனத் தொடர்ந்து பத்து ஆண்டுகளாகத் தர நிர்ணயம் செய்யப்பட்டது. மற்றொரு பிரசித்திபெற்ற சர்வதே நிதிச் சஞ்சிகையான "யூரோமணி" 2007 ஜுலையில் இலங் கையில் "மிகச் சிறந்த வங்கி" என தரச் சான் றிதழ் வழங்கியமையும் குறிப்பிடத் தக்கது. (ஓ)

# நெஞ்சத்தின் சந்தங்கள் இறுவெட்டு வெளியீடு

இறையடியார் வணபிதா வ.அ. தோமஸ், அ.ம.தி. அடிகளாரின் மறைவின் 45 ஆவது ஆண்டு நினைவு நாளாகிய நாளை மறு தினம் திங்கட் கிழமை பிற்பகல் 4 மணிக்கு 'நெஞ்சத்தின் சந்தங்கள்' கிறிஸ்தவ பாடல் கள் ஒலி இறுவெட்டு வெளியீடு செப மாலைத் தாசர் சபை அருள் ஆச்சிரமத்தில் யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்தர நாயகம்அடிகளார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ் இறுவெட்டு இறை உறவின் ஆழத் திலிருந்து எழுந்த திருப்பலி மற்றும் இசை நடனப் பாடல்களை அடக்கி இந்தியாவில் தயாரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ-4)

# அரசசார்பற்ற நிறுவனங்களை கண்காணிக்க புதிய சட்டமூலம்

(கொழும்பு)

சர்வதேச மற்றும் உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்கள் தொடர்பாக சட்டமூலமொன் றை நிறைவேற்றுவது தொடர்பாக பாராளுமன்ற தெரிவுக்குழு, அமைச்சின் செயலாளர்களுடன் கலந்துரையாடலொன்றை நடத்தியுள்ளது.

சர்வதேச மற்றும் உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களைக் கண்காணிப்பது தொடர்பாக ஆராய்வதற்கு பாராளுமன்ற தெரிவுக் குழுவொன்று நியமிக்கப்பட்டது. இந்தக் குழுவினர், சில அமைச்சுக்களின் செயலாளர்களைச் சந்தித்து, அரச சார்பற்ற நிறுவனங்களை கண்காணிப்பதற்கான சட்ட மூல மொன்றைகொண்டுவருவதுபற்றி ஆராய்ந்துள்ளனர்.

நிதியமைச்சு, பாதுகாப்பு அமைச்சு, சமூக சேவைகள் அமைச்சு மற்றும் திட்டமிடல் அமைச்சு ஆகியவற்றின் செயலாளர்களைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியதாக பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் தலைவர் விஜித ஹேரத் கூறினார்.

அரச சார்பற்ற நிறுவனங்கள் தொடர்பாக ஆராய்ந்து தனது இடைக்கால அறிக்கையைத் தாம் சமர்ப்பித்திருப்பதாகவும், அவற்றைக் கண்காணிப்பதற்கு சட்டமூலமொன்றைக் கொண்டுவரவிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சமூக சேவைகள் அமைச்சு இந்தச் சட்டமூலத்தை ஏற்கனவே தயாரித்துவிட்டது. இதில் மேலும் சில பரிந்துரைகளை நாம் இணைத்துக்கொள்ளவுள்ளோம் என விஜித ஹேரத் கூறினார். (ச-5)







நேற்று நடைபெற்ற யாழ். இந்து மகளிர் ஆரம்பபாடசாலை நுழைவாயில் பெயர் வளைவு திறப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி. அ.வேதநாயகம் மங்கள விளக்கேற்றுவதையும், பெயர் வளைவை திறந்து வைப்பதையும், லயன் எஸ். தனபாலசிங்கம் திரை நீக்கம் செய்வதையும் பாடசாலை அதிபர் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட மாணவர்களையும் படங்களில் காண லாம்.

# இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 4-III

### பசுந்தாள் பசளைகள்

எந்த மண்ணில் விவசாயம் செய்கிறோமோ அந்த மண்ணில் சாதாரணமாக பயிர் செய்வதற்கு முன்கூட்டியே பசுந்தாள் பசளை தாவரங்களை பயிர் செய்யும் முறை பல இடங்களில் கடைப்பிடிக்கப் படுகின்றது. கிட்டத்தட்ட 1-1½ மாதங்களுக்கு



முன்னரேயே உழுது விட்ட வயற்பரப்பில் முதல் மழையுடன் இதன் விதைகளை விதைப்பர். அதனுடன் சேர்த்து அம் மண்ணில் நட வேண்டிய பயிரில் அது மிளகாயா, தக்காளியா, கத்தரியா, புகையிலையா எதுவாகிலும் அதன் நாற்று மேடை அமைக்கப்படும்.

நாற்று நடுவதற்கான பருவம் வரும் போது இங்கே வயற் பரப்பில் பசுந்தாள் பசளையாக விதைத்த சணல் பூக்கத் தொடங்கி விடும். 50% பூத்திருக்கும் நிலையில் சணலை மடக்கிப்பிரட்டி மண்ணினுள் சேர்த்து உழுது விடுவர். ஓரிரு கிழமைகளுள் சணல் உக்கத் தொடங்கிவிடும் அப்போது நாற்றுப் போட்ட பயிர்களை நடவு செய்வர்.

சணல் அவரைக் குடும்ப பயிராக இருப்பதனால் வளியிலுள்ள தழைச் சத்தை இழுத்து தனது வேரிலுள்ள முடிச்சுக்களை உருவாக்கும் ரைசோபியம் பக்டீரியாவுடன் சேர்ந்து மண்ணினுள் நிலை நாட்டுவதனால் இவ்வகையான தாவர மூலமான தழைச் சத்தின் உற்பத்தி மண் வளத்தை மேம்படுத்த பெரிதும் உதவும். இது ஒரு இயற்கை பொறிமுறை. விவசாயிக்கும் ,சூழலுக்கும் ஏன் எமக்கும் நன்மை தருகின்ற பயிர்ச்செய்கை முறை.

இன்னொரு பசுமைப்புரட்சியில் அசேத இரசாயனங்களின் பாவனையை இயன்றளவில் குறைத்து சேதன முறையிலான இயற்கையை அனுசரித்து செய்யும் பயிர்ச் செய்கை முறையை விரிவுபடுத்த வேண்டும். இருக்கின்ற ஒரு வழியும் இது தானே.

### வகை வகையாக பசுந்தாள் பசளைகள் (Green Manure)

சணல் பயிர் தான் அநேகமான விவசாயிகள் பசுந்தாள் பசளைகளாக பயன்படுத்தவது வழக்கமென்றாலும் அவரைக் குடும்பத்தைச் சேர்ந்த எந்தப் பயிரையும்




இதில் இணைத்துக் கொள்ளலாம்.

அவரைக் குடும்பத்திலுள்ள பயிர்களுக்கு வளியிலுள் நைதரசனை - தழைச் சத்தை வேர் முடிச்சுக்களாக மண்ணில் பதிக்கும் திறன் உண்டு. சணல் தவிர, உழுந்து, பயறு போன்ற பயிர்களைக்கூட இத் தேவைக்குப் பயன்படுத்தலாம்.

அத்துடன் எமது வயற் பரப்பில் களையாக காணப்படும் " காவிளாய்" ஒரு அவரைக் குடும்பப் பயிர் . இது வளர்ந்து பூக்க ஆரம்பிக்கும் போது மடக்கி உழுது விட் டால் களையாக உள்ளதை பசுந்தாள் பசளையாக்கும் வழி கிடைத்து விடும். எதற்கும் நேர அளவு தானே முக்கியம்.திட்டமிட்டபடி விவசாயத்தை செய்ய விழையும் போது இப் பயிர்ச் 'செய்கை முறைகள் நிறைந்த பலனைத் தரும். காவிளாய் பூத்திருக்கும் போது பசுந் தாள் பசளை. காய்த்து விதை கொட்டினால் களை.

### பசுந்தாள் இலைப் பசளைகள் (Green Leaf Manure)

பசுந்தாள் இலைப் பசளைகள் என்பவை தரிசுக்காணிகளில் , உயிர் வேலிகளில், பாதை யோரத்தில் வளர்ந்திருக்கும் மரங்கள் ஆகியவற்றின் இலைகளை கொய்து அல்லது கத்தரித்து வயலுக்கு இடுதலாகும்.

மாறாக பசுந்தாள் பசளைகள் பயிர் செய்யும் நிலத்தில் விளைவித்து அதனுள்ளே இடுதலாகும். இது மண்ணில் உதித்தவை அரைவயதில் சருகாக மண்ணினுள்ளேயே புதைக்கப்படுவதை ஞாபக மூட்டுகிறதல்லவா.

பசுந்தாள் இலைப் பசளைகளைப் பயன் படுத்துவதில் எங்களூர் விவசாயிகள் கில்லாடிகள். ஆனாலும் ஒரு சிலரே இதனைக் கடைப்பிடிப்பதனை அவதானிக்க முடிகிறது.

பசுந்தாள் இலைப் பசளைகளாக உயிர் வேலிகளில் வளர்க்கப்படும் பூவரசு, கிளிசிடியா அல்லது சீமைக்கிளுவை போன்றவையும், தரிசுக் காணிகளில் வயற்பரப்பில் தானாகவே வளர்ந்திருக்கும் எருக்கலை மற்றும் பன்னை போன்றவற்றின் இலைகளை வெட்டி வாட விட்டு மண்ணைப் பயன் படுத்தும் போது அதனுள் தாழ்த்துவிட்டால் இலைகள் மண்ணினுள் உக்கி வளரும். பயிருக்கு சிறந்த உரமாகி விடும்.

இந்தப் பயிர்ச்செய்கை முறையை உலகிலுள்ள அனைத்து நாடுகளும் பயன்படுத் துவது இதன் சிறப்பினை கட்டியங் கூறுவதாகும்.

### பசுந்தாள், பசுந்தாள்இலை பயன்பாட்டில் வேறு பலன்கள்.

⌖ இவ்வகைத் தாவரங்களில் இயல்பாகவே பூஞ்சண எதிர்ப்பு ,பக்டீரியா எதிர்ப்புசக்தி இருப்பதனால்நாற்றுக்களின் வேரினூடாக ஏற்படும் அநேகமான நோய்கள் கட்டுப்படுத்தப்படுகின்றன.

⌖ இவற்றை மண்ணினுள் சேர்ப்பதனால் விவசாயிகளுக்கு நன்மை தரக்கூடிய , பயிருக்கு வலிமை சேர்க்கும் நுண்ணங்கிகளின் எண்ணிக்கையை குறைவடைய விடாது,

அதேநேரத்தில் விரைந்து பெருக்கி விடும்.இதனால் பயிர்களில்நோயை உருவாக்கும் நுண்ணங்கிகளின் எண்ணிக்கையை , வலிமையை நலிவடையச் செய்து விடலாம்.

⌖ பசுந்தாள் இலைகளை மண்ணினுள் இடும் போது மண் உயிர்ப்புத் தன்மை பெறுகின்றது. அதேநேரத்தில் இரசாயனங்களின் செறிவினை மண்ணில் மாற்றியமைக்கும் செயலையும் இலகுவில் செய்துவிடும். இன்னொரு வகையில் பயிருக்கு கிடைக்கக் கூடிய சத்துக்களாக மாற்றியமைப்பதனால் அவை பயிரினால்இலகுவாக அகத்துறிஞ்சப்பட பயிர் செழித்து வளர்ந்துவிடும்.

**கலாநிதி கு.மிகுந்தன்**
தலைவர்
உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

மண்ணினது தன்மை மற்றும் வளம் குறைந்து விடாது பயிர்ச் செய்கை செய்வது சிறந்ததாகும்.மண்ணினுள் பயிர்களுக்கு நோயை உருவாக்கும் நுண்ணங்கிகளை பல்கிப் பெருக இடமளித்துவிட்டால்பின்னர் பயிர்ச் செய்கையில் அதுவே பெருந்தலையிடியாகிவிடும்.

மண் வளத்தை பெருக்கும் அதே நேரத்தில் அதிலிருந்து அதன் வளம் கெடாது உச்சப்பயன்பாட்டைப்பெற முயற்சிக்க வேண்டும். (தொடரும்)

# உள்ளூர் மரக்கறி பயிர்ச் செய்கையில் உயர்தர சுயவிதை உற்பத்தியும் அதன் பயன்பாடும்

மரக்கறிப் பயிர்ச் செய்கையில் அதிகளவில் பயன்படுத்தும் நடுகைப் பொருள் விதையாகும்.ஒரு பயிர்ச் செய்கையின் வெற்றியைத் தீர்மானிக்கும் காரணிகளுள் மிகவும் பிரதானமானது உயர் தர விதையாகும் . விவசாயி பருவத்தே பயிர் செய்து பயன்பெற உரிய காலத்தில் தரமானவிதை கிடைத்தல் வேண்டும்.

இதனையே ஔவைப் பிராட்டி யாரும் தமது கவிதையிலே ''இல்லத்தே வித்துளதாய்'' என நயம்பட உரைத்துள்ளார். யாழ். குடா நாட்டில் தற்போது நிலவும் அசாதாரண சூழ் நிலை காரணமாகவும், குளிர் சாதன வசதியுடன் கூடிய களஞ்சிய அறை வசதி இன்மையாலும் , அண்மையில் இடம் பெற்ற இயற்கை அனர்த்தத்தினாலும் விவசாயிகள் உரிய நேரத்தில் உயர் தர விதைகளைப் பெற்றுக் கொள்ள முடியாமலிருக்கின்றனர்.

பெரும்பாலான உலர்வலய மரக்கறி விதைகளை உள்ளூரிலேயே உற்பத்தி செய்யக்கூடிய சூழல் எமது நாட்டில் நிலவுகின்றது. போஞ்சி, முள்ளங்கி போன்ற மேலை நாட்டு மரக்கறி விதைகளை தவிர ஏனையவற்றை இங்கு உற்பத்தி செய்வதற்கு உகந்த கால நிலை எமது நாட்டில் இல்லை.

விவசாயத் திணைக்களம் நீண்ட காலமாகவே மரக்கறி விதை உற்பத்தியில் ஈடுபட்டுவருகின்றது. தனியார் நிறுவனங்களும் விதை உற்பத்தி செய்கின்றன. எனினும் விவசாயிகளின் விதைத் தேவைகளை இவை உரிய நேரத்தில்பூர்த்தி செய்யாமல் உள்ளன.

அண்மைக்காலத் தரவுகள் விவசாயிகள் சுயவிதை உற்பத்தியில் ஈடுபட்டுள்ளனர் என்பதனை நிரூபிக்கின்றன.

ஆனால் அவர்களது உற்பத்தி உயர் தரமானதாக உள்ளதா என்பது கேள்விக் குறியாகவே உள்ளது. எனவே தரமான சுய விதை உற்பத்தியின் முக்கியத்துவம் விவசாயிகள் மத்தியில் ஊக்குவிக்கப்படல் வேண்டும். விவசாயிகள் தாமாகவே பயிர் செய்து பாதுகாத்து வரும் பயிர் விதைகளில் இருந்து தாவர கரு மூலவளங்கள் பாதுகாக்கப்படுகின்றன.

அருகிவரும் பாரம்பரிய நெல்லினங்களான " மொட்டைக்கறுப்பன்," "பெரிய வெள்ளை," "சீனட்டி," "பச்சைப்பெருமாள்" போன்றனவும், சாமை , திணை,வரகு போன்ற சிறுதானிய வகைகளும் , பனிஅவரை வாள் அவரை , கொத்த வரை, கராம்பு அவரை போன்ற மரக்கறிப் பயிர்களும், பால் பீர்க்கு, சுரைக்காய், வெள்ளரி போன்ற பூசனிக்குடும்பப் பயிர்களும் சுயவிதை உற்பத்தியினாலேயே பேணப்பட்டு வருகின்றன.

வீட்டுத் தோட்டச் செய்கையாளர்களுக்கு வெவ்வேறு பருவகாலங்களில் பல பயிர் வர்க்கங்களின் விதைகள்சிறிய அளவுகளில் தேவைப்படும். பெரிய விதை உற்பத்திப் பண்ணைகள், தனியார் விதை உற்பத்திப் பண்ணைகளில் இருந்து இவற்றைப் பெற்றுக் கொள்வது விவசாயிகளுக்குச் சிரமமான காரியமாகும். அத்துடன் விலையும் அதிகமானதாக இருக்கும்.கிராமப்புறங்களில் வழக்கத்தில் உள்ள மிகவும் விரும்பப்படும் அரிதான இனங்கள் சுய விதை உற்பத்தி மூலமே காக்கப்படுகின்றன. இதுபோன்ற இன்னோரன்ன அனுகூலங்களினால் சுய விதை உற்பத்தியானது விவசாய அபிவிருத்தியில் பெரும் பங்காற்றுகின்றது.

### உயர்தர சுயவிதை உற்பத்தி

உயர் தர சுய விதை உற்பத்தியில் ஈடுபடும் விவசாயிகள் மரக்கறி விதை உற்பத்தியின் பின்வரும் அடிப்படைத் தத்துவங்களை அறிந்திருப்பதுமிகவும் அவசியமானதாகும்.

- ❖ ஒவ்வொரு வர்க்கத்திற்குமுரிய இயல்புகள்
- ❖ 90% ற்கும் அதிகமான முளைதிறன்
- பிற பொருட்கள் 1% இலும் குறைவாக இருத்தல்
- ❖ நியமங்களுக்கேற்ப ஈரப்பதன்
- ❖ களை அல்லது வேறு பயிர்களின் விதைகள் கலந்திருக்காமை
- ❖ பூச்சி,நோய் காரணிகள் இல்லாதிருத்தல்
- ❖ சேதமடைந்த விதைகள் இல்லாதிருத்தல்

வர்க்கங்களுக்குரிய இயல்புகள் பேணப்படுவதற்கு அவற்றின் மகரந்தச் சேர்க்கை தொடர்பான அறிவு அவசியம். தன் மகரந்தச் சேர்க்கை நடைபெறும் பயிர்களின் சந்ததிகள் பெரும்பாலும் வேறுபாடு காட்டுவதில்லை. சில வேளைகளில்இயற்கை விகாரம் ஏற்படின் தன்மகரந்தச் சந்ததிகள் கூட வேறு பாடுகளைக் காட்டக் கூடும்.

அயன் மகரந்தச் சேர்க்கையின் மூலம் தோன்றும் வித்துகளின் சந்ததிகளில் பெரும்பாலும் வேறுபாடுகள் தோன்றும். கண்ணுக்குப் புலப்படாத தாவரகருக்க ளில் ஏற்படும் உயிரியல் விளைவுகள்இத் தாவரங்களின் சந்ததிகள் இயல்புகளில் இருந்து வேறுபடுவதற்கு காரணமாகின்றன. விதை உற்பத்திக்காகப் பயிரிடும் பொழுது அயன் மகரந்தச் சேர்க்கை யைத் தவிர்ப்பதற்கு ஒவ்வொரு வர்க்கங்களையும் தனிமைப் படுத்தல்இடை வெளி (Isolation distance) கொடுத்துப்பயிரிடல்வேண்டும். தனிமைப் படுத்தல் இடைவெளி என்பது விதை உற்பத்திக்காகப் பயிரிட்ட பயிரானது காற்றினாலும், பூச்சிகள் போன்ற பிற காரணிகளினாலும் அயன் மகரந்தச் சேர்க்கையுறாமல் தடுப்பதற்கான இடைவெளியாகும். சிறிய அளவில் விதைகளை உற்பத்தி செய்வதற்காக ஓரிரு தாவரங்களைப் பராமரிப்பதாயின் மகரந்த மணிகள், பூச்சிகள் உட் செல்ல முடியாத வலைகள் மூலம் கூடு அமைத்து தனிமைப்படுத்தலாம். இவ்வாறு செய்வதனால் அயன் மகரந்தச் சேர்க்கை தடுக்கப்பட்டு தன்மகரந்தச் சேர்க்கை நடை பெறும்.

பின்வரும் அட்டவணையில் சிலமரக்கறிப் பயிர்களின் மகரந்தச் சேர்க்கை வகைகளும், தனிமைப் படுத்தல் இடைவெளியும் தரப்பட்டுள்ளன. (தொடரும்)

| பயிர் | மகரந்தச் சேர்க்கை வகை | தனிமைப்படுத்தல் இடைவெளி (மீற்றரில்) |
|---|---|---|
| தக்காளி | தன் மகரந்தச் சேர்க்கை | 60 |
| அவரைமரக்கறி பயிர்கள் | தன் மகரந்தச் சேர்க்கை | 130 |
| பூசனிக்குடும்பப் பயிர்கள் | அயன் மகரந்தச் சேர்க்கை | 1000 |
| வெங்காயம் | அயன் மகரந்தச் சேர்க்கை | 1000 |
| மிளகாய்,கறி மிளகாய் | தன், அயன் மகரந்தச் சேர்க்கை | 360 |
| கத்தரி | தன்,அயன்மகரந்தச் சேர்க்கை | 900 |
| வெண்டி | தன் , அயன் மகரந்தச் சேர்கை | 200 |
| முளைக்கீரை | தன்,அயன் மகரந்தச் சேர்க்கை. | 1000 |

**சி.ஜெ.அரசகேசரி**
பிரதி விவசாயப்பணிப்பாளர்(ஆராய்ச்சி)
பிராந்திய விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம் , வவுனியா

**க.ஜெகநாதன்**
விவசாய போதனாசிரியர். விவசாய ஆராய்ச்சி நிலையம் .திருநெல்வேலி

எத்தனையோ அநீதிகள்–பழக்கத்தால் நீதிகளாக தோன்றுகின்றன.

~ ஆப்கானிஸ்தான்

வலம்புரி

## தமிழர் மீதான வதைக்கு எதிராக சிங்கள மக்கள் குரல் கொடுக்க வேண்டும்

இலங்கையில் சிறுபான்மைத் தமிழினம் நசுக்கப்படும் துயரம் நீண்ட காலமாக இந்த நாட்டில் தொடர்கிறது.

தந்தை செல்வநாயகம் போன்ற தலைவர்கள் ஜனநாயக வழியில் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக சிங்களத் தலைவர்களுடன் அகிம்சை வழியில் பேச்சுக்கள் நடத்தினர்.

பேச்சுவார்த்தைகள் எவையும் பயனற்றுப் போக, தமிழரின் யதார்த்த நிலையை வெளிப்படுத்துவதற்காக உண்ணாவிரதப் போராட்டங்களை அகிம்சை வழியில் மேற்கொண்டனர்.

இவை எல்லாம் சிங்கள ஆட்சியாளர்கள் மத்தியில் தோற்றுப்போயின.

இப்போது ஆயுதப் போராட்டம். அதற்கு அரசின் பெயர் பயங்கரவாதம்.

பயங்கரவாதத்தை தோற்கடிப்பதற்கான நடவடிக்கை என்ற பெயரில் யுத்தம் நடக்கிறது.

யுத்தத்தில் கிளிநொச்சி, ஆனையிறவு, பரந்தன் என பிரதேச மீட்புக்கள் நடக்கின்றன.

இந்தப் பிரதேச மீட்பு சிங்கள இனத்திற்கு வெற்றி எனக் காட்டப்படுகிறது. இதன் வெற்றி விழாக் கொண்டாட்டங்கள் தென்பகுதியில் வெடிகொளுத்தி நடத்தப்படுகின்றன.

அதேநேரம் தென்பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. தென்பகுதியில் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தலாம் என்ற அச்சம் இருப்பதாகவும் அரச தரப்பில் கூறப்படுகிறது.

இங்குதான் அர்த்தமற்ற – முன்னுக்குப் பின் முரணான மொழியாடல்கள் வெளிப்படுகின்றன. அதாவது, தமிழர் தாயத்திலுள்ள பிரதேசங்களை மீட்டுவிட்டோம் என்ற களிப்பில் விழாக் கொண்டாடிவிட்டு தென்பகுதியில் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தும் அபாயம் இருப்பதாக கூறுவது எவ்வகையிலும் பொருத்தப்பாடுடையதா என்பதை சிங்கள மக்கள் ஒரு கணம் சிந்தித்தாக வேண்டும்.

யுத்தத்தின் மூலம் வன்னியில் பிரதேசத்தை மீட்டுவிட்டு தென்பகுதியில் தாக்குதல் இடம்பெறலாமெனக் கூறுவதிலிருந்து யுத்தத்தால் அமைதி –சமாதானம் என்பவற்றை அடைய முடியாது என்பது நிரூபணமாகிறது.

அதேநேரம் யுத்தத்தினால் ஏற்பட்ட இழப்புகள் ஈடுசெய்யப்பட முடியாதவை.

வன்னிப் பகுதியில் அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்ட வண்ணமுள்ளனர்.

யுத்த இழப்புக்கள் சிங்கள மக்களுக்கும் ஏற்பட்டுள்ளதென்பது மறுக்க முடியாத உண்மை.

நாட்டின் எந்தப் பகுதியில் மனித இழப்புக்கள் ஏற்பட்டாலும் அதனை அனுமதிக்க முடியாது. எனவே வன்னியில் நடக்கும் கொடூர யுத்தத்தில் அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்படுவதற்கு எதிராக சிங்கள மக்கள் கிளர்ந்தெழ வேண்டும்.

இதனையே கௌதம புத்தபிரான் விருப்புடன் ஏற்றுக் கொள்வார்.

# வெளிநாட்டு பிரதிநிதிகளுக்கு எதிர்ப்பு தெரிவிப்பது அரசுக்கு எதிரான சூழ்ச்சித் திட்டம்


## ஜே.வி.பியின் செயல் குறித்து அமைச்சர் ரோகித போகொல்லாகம

(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் செய்யும் வெளிநாட்டு பிரதிநிதிகளுக்கு ஜே.வி.பி கடுமையான எதிர்ப்பை தெரிவித்து வருகின்றமை அரசாங்கத்திற்கு எதிரான ஒரு சூழ்ச்சித் திட்டமாகும் என வெளிவிவகார அமைச்சர் ரோஹித்த போகொல்லாகம குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச ரீதியில் இலங்கை அரசாங்கத்தின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுத்த ஜே.வி.பி முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக வெளிவிவகார அமைச்சர் அண்மையில் இலங்கைக்கு விஜயம் மேற் கொண்டிருந்த இந்திய வெளியுறவுத் துறை அமைச்சின் செயலாளர் சிவ்சங்கர் மேனன், தற்போது விஜயம் மேற்கொண்டுள்ள ஜப்பானிய விசேட பிரதிநிதி யசூசி அகாசி ஆகியோரது விஜயங்களுக்கு எதிராக ஜே.வி.பி தேவையற்ற வகையில் எதிர்ப்புத் தெரிவித்து வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

வெளிநாட்டு இராஜதந்திரிகளின் விஜயங்கள் குறித்து ஐக்கிய தேசியக் கட்சி ஒரு போதும் எதிர்ப்பு வெளியிட்டதில்லையெனவும் இதன் மூலம் வெளி யுறவுக் கொள்கையில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஒற்றுமை புலப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



இதேவேளை, நாட்டில் முக்கிய யுத்த முன்நகர்வுகள் நடைபெற்று வரும் சந்தர்ப்பத்தில் இலங்கைக்கு விஜயம் மேற் கொள்ளும் இராஜதந்திரிகள் குறித்து உன்னிப்பாக கவனம் செலுத்த வேண்டுமென ஜே.வி.பி.யின் பாராளுமன்ற உறுப்பினர்அனுரகுமாரா திஸாநாயக்க பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ–6)

# மிருசுவில் நலன்புரி நிலையத்தின் தற்போதைய சுகாதார நிலைமை

(மிருசுவில்)

மிருசுவில் நலன்புரி நிலையத்தில் வயிற்றோட்டம் மற்றும் மலேரியா காய்ச்சல் பரவுவதாக பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகள் சம்பந்தமாக உண்மை நிலைமையை யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன் தெளிவுபடுத்துகின்றார்.

மிருசுவில் நலன்புரி நிலையத்திற்கான நடமாடும் மருத்துவ சேவையை கொடிகாமம் அரசினர் வைத்தியசாலை, சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலை மருத்துவர்கள் மேற்கொண்டு வருகின்றனர். இங்குள்ள சுகாதார நடவடிக்கைகளை சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி ஒருங்கிணைத்து வருகின்றார்.

இங்கு மக்களுக்கு குடிநீர்ப் பாவனைக் காக வழங்கப்படும் நீர் குளோரின் இடப்பட்டே வழங்கப்படுகின்றது. இதனை எமது பொதுச் சுகாதார பரிசோதகர்கள் தினசரி மேற்பார்வை செய்து வருகின்றனர். மேலும் அங்கு தங்கியிருப்பவர்களுக்காக அங்குள்ள நிரந்தர மலசல கூடங்களுக்கு மேலதிகமாக தற்காலிக மலசலகூடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இங்கு வழங்கப்படும் சமைத்த உணவை தயாரிக்கும் பணியை எமது பொதுச்சுகாதார பரிசோதகர்கள் மேற்பார்வை செய்து வருகின்றனர்.

ஆயிரத்து 300 இற்கும் மேற்பட்ட மக்கள் தங்கியுள்ள இந்த நலன்புரி நிலையத்தில் சிலருக்கு கடந்த சில நாட்களில் வயிற்றோட்டம், வைரஸ் காய்ச்சல் போன்றன பரவியிருந்தமை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. இதனைக் கட்டுப்படுத்த சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரியினால் உரிய தடுப்பு நடவடிக்கைகள் எமது நேரடி மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்பட்டன. தற்போது இந்நோய்களின் பரம்பல் கட்டுப்பாட்டில் உள்ளன.

மேலும் வன்னிப்பிரதேசத்தில் மலேரியா நோய் பரவி வருகின்றமையால் வன்னியிலிருந்து வரும் அனைத்து மக்களிற்கும் மலேரியா இரத்தப் பரிசோதனை செய்து வருகின்றோம். இவர்கள் மத்தியில் ஒருவருக்கு மலேரியா இருப்பது கண்டு பிடிக்கப்பட்டு சிகிச்சை வழங்கப்படுகின்றது. மலேரியா தடுப்பு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஓ

# ஊடகவியலாளர் 15 பேரை படுகொலை செய்த அரசாங்கமே இன்று ஆட்சியிலுள்ளது

ஊடகவியலாளர்கள் 15 பேரை படுகொலை செய்து ஒட்டு மொத்த ஊடக சுதந்திரத்தையும் ஒழித்துக் கட்டியுள்ள அரசாங்கமே தற்போது இந்த நாட்டை ஆட்சி செய்து கொண்டிருக்கின்றது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க சபையில் குற்றம் சாட்டினார்.

பாராளுமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற வாய்மூல விடைக்காண கேள்வியொன்றுக்கு அரசாங்கத்தின் பிரதம கொறடாவான அமைச்சர் தினேஷ் குணவர்தனவின் கூற்று ஒன்றுக்கு பதிலளிக்கையிலேயே எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

*அவர் மேலும் கூறுகையில்,*

சண்டே லீடர் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் நாட்டை விட்டு துரத்தப்பட்டுள்ளார். இன்றைய கூட்டமைப்பு அரசாங்கத்தினால் இன்று வரையில் 15 ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

அரச ஊடகமான தேசிய ரூபவாஹினி உட்பட தொலைக் காட்சி நிறுவனங்கள் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளன. இவையனைத்தையும் நோக்கும் போது அரசாங்கம் ஒட்டு மொத்த ஊடக சுதந்திரத்தையும் ஒழித்துக் கட்டும் நடவடிக்கைகளிலேயே ஈடுபட்டுள்ளது என்பது தெளிவாகின்றது.

அரசாங்கத்திற்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சி நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு வருவதற்கு முதல் தினத்திலேயே சண்டே லீடர் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க படுகொலை செய்யப்பட்டார்.

இதனாலேயே நாம் குறித்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை விவாதத்திற்கு எடுக்காது லசந்தவின் படுகொலை சம்பவத்தை சபையில் எடுத்தோம்.

அரசாங்கம் என்ன செய்கின்றது என்பதற்கெல்லாம் குறித்த ஒரு அமைச்சர் பொறுப்புக் கூற முடியாது. இன்றைய ஆட்சியில் இருக்கும் அரசாங்கத்தின் மீது நம்பிக்கை வைப்பதற்கு எதுவுமே இல்லை. இந்த ஒரே காரணத்திற்காகவே ஐக்கிய தேசியக் கட்சி மீண்டும் நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டுவர நேர்ந்தது என்றார். (ஓ–6)

# யுத்த பிரதேசத்திலுள்ள சிறுவர்கள் குறித்து ஐ.நா. கவனம்

**ராதிகா குமாரசாமி**

(கொழும்பு)

இலங்கையின் வடக்கே யுத்தத்தில் சிக்குண்டுள்ள சிறுவர்கள் தொடர்பில் ஐ.நா. சபையில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

ஐ. நா சபையின் வியாழக்கிழமை அமர்வின் போது ஐ.நாசபை பொதுச் செயலாளரின் சிறுவர் மற்றும் ஆயுத மோதல் தொடர்பான விடேச பிரதிநிதி ராதிகா குமாரசுவாமி இந்த விடயம் குறித்து விளக்கமளித் தார்.

யுத்தத்தால் இடம்பெயர்ந்துள்ள சிறுவர்கள் மற்றும் போரா ளிகளிடம் இருக்கும் சிறுவர்கள் ஆகியோர் தொடர்பில் அவதான நிலைமை ஏற்பட்டுள்ளதாக ராதிகா குமாரசுவாமி குறிப்பிட்டார்.

புலிகள் சிறுவர்களையும் அவர்களது பெற்றோர்களையும் பாதுகாப்பான இடங்களுக்கு செல்ல அனுமதிக்க வேண்டும் .

அத்துடன் அரசாங்கம் அவர்களுக்கு உதவி வழங்கவும் மனிதாபிமான முறையில் அனுமதி வழங்க வேண்டும் எனவும் அவர் இதன் போது கோரிக்கை விடுத்தார். (ஓ–6)

# சுவாமி விவேகானந்தரின் ஆளுமை வளர்ச்சி

## தனித்தன்மையுடன் இரு



விதை தரையில் ஊன்றப்பட்டு, மண்ணும் காற்றும் நீரும் அதைச் சுற்றி போடப்படுகின்றன. விதை மண்ணாகவோ, காற்றாகவோ, நீராகவோ ஆகிறதா? இல்லை. அது செடியாகிறது. தனது வளர்ச்சி நியதிக்கு ஏற்ப அது வளர்கிறது. காற்றையும், மண்ணையும், நீரையும் தனதாக்கிக் கொண்டு, தனக்கு வேண்டிய சத்துப் பொருளாக மாற்றி, ஒரு செடியாக வளர்கிறது.

அதே போலவே ஒவ்வொரு வரும் மற்ற மதங்களின் நல்ல அம்சங்களைத் தனதாக்கிக் கொண்டு, தன் தனித்தன்மையைப் பாதுகாத்துக் கொண்டு தன் வளர்ச்சி நியதியின் படி வளர வேண்டும்.

# தமிழர்களின் சுயநிர்ணய உரிமை போராட்டத்தை அ.தி.மு.க ஆதரிக்கின்றது

## கட்சியின் பொதுச் செயலாளர் ஜெயலலிதா தெரிவிப்பு



(சென்னை)

இலங்கைத் தமிழர்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை அ.தி.மு.க ஆதரிக்கிறது என அக்கட்சியின் பொதுச் செயலாளர் ஜெயலலிதா கூறியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

கடந்த 17 ஆம் திகதி இலங்கைத் தமிழர்கள் குறித்து நான் அளித்த பேட்டி திரித்து கூறப்பட்டுள்ளது. நான் இலங்கைத் தமிழர்களுக்கு எதிராகவும், இலங்கை இராணுவத்துக்கு ஆதரவாகவும் பேசியதைப் போன்று மாயத் தோற்றத்தை உருவாக்க முயல்வது கண்டனத்துக்குரியது என்றார்.

சுய நிர்ணய உரிமைக்கான இலங்கைத் தமிழர்களின் போராட்டத்தை அ.தி.மு.க. முழு மனதோடு ஆதரிக்கிறது. அதே சமயம் ஆயுதம் ஏந்தி பயங்கரவாதத்தில் ஈடுபடுவதை எதிர்க்கிறது.

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு ஜன நாயக ரீதியில், அரசியல் ரீதியான தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் எந்தவித மான மாற்றுக் கருத்தும் இருக்க முடியாது.

இலங்கையில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இனப் போரை உடனடியாக முடிவுக்கு கொண்டு வர வேண்டும்.

இலங்கைத் தமிழர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். அவர்கள் சிங்கள மக்களுக்கு சமமாக வாழ, நிரந்தர அரசியல் தீர்வு காண வேண்டும் என்பதுதான் அ.தி.மு.க. வின் நிலைப்பாடு.

இதற்கு உதவ மத்திய அரசு முன்வர வேண்டும் என தமிழக மக்களின் சார்பில் கேட்டுக் கொள்கிறேன் என்றார். (ஓ-6)

# இந்திய அரசைக் கண்டித்து பெப்ரவரி 12 இல் புதுடில்லியில் வைகோ உண்ணாவிரதம்



(சென்னை)

இலங்கை தமிழர் பிரச்சினையில் மத்திய அரசு காட்டும் அலட்சியத்தைக் கண்டித்து மதிமுக பொதுச்செயலாளர் வைகோ புதுடில்லியில் பெப்ரவரி 12 ஆம் திகதி உண்ணா விரதம் மேற்கொள்கிறார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

முல்லைத்தீவில் 6 இலட்சம் தமிழர்கள் சிங்கள இராணுவத்தின் கோரத் தாக்குதலால், மரணத்தின் பிடியில் சிக்கியுள்ளனர். கடந்த 3 நாட்களாக இந்தியா அளித்த ஏவுகணைகளைக் கொண்டு இலங்கை இராணுவம் தாக்குதல் நடத்தி வருகிறது.

இடைவிடாமல் பீரங்கித் தாக்குதல்கள் நடைபெறுகின்றன. உலக நாடுகளில் தடை செய்யப்பட்ட கொத்துக் குண்டுகளை வீசி தமிழர்கள் அழிக்கப்படுகின்றனர்.

காசா நகரில் இஸ்ரேல் நடத்திய குண்டு வீச்சை உலக நாடுகள் பலவும் கண்டித்தன. பாலஸ்தீனர்களுக்கு ஆதரவாக உலகெங்கும் பேரணிகள் நடைபெற்றன. ஆனால் நமக்கு 20 மைல் தொலைவில் நடைபெறும் ஈழத் தமிழர்கள் படுகொலையை தடுத்து நிறுத்த இயலாத நிலையில் நாம் உள்ளோம்.

தற்போது நடைபெறும் தமிழ் இன அழிப்பை இந்திய அரசு கொடிய நோக்கோடு, திட்டமிட்டு ஊக்குவித்து வருகிறது. இந்திய அரசின் மன்னிக்க முடியாத துரோகம் தொடர்ந்து கொண்டேயிருக்கிறது.

தமிழர்களைக் காக்கும் கடமையைச் செய்ய வேண்டிய தி.மு.க அரசு அதிகாரத்தைப் பங்கு வைத்து அனுபவிப்பதற்காக, மத்திய அரசின் துரோகத்துக்கு எதிர்ப்பு காட்டாமல் தமிழக மக்களை ஏமாற்றும் வேலையில் ஈடுபட்டுள்ளது.

இந்நிலையில் ஈழத் தமிழர்களுக்கு இந்திய அரசு செய்யும் துரோகத்தைக் கண்டித்தும், ஈழத் தமிழர்களின் துயரத்தைப் போக்க அனைத்து மட்டங்களிலும் ஆதரவைத் திரட்டவும் ம.தி.மு.க. சார்பில் புதுடில்லியில் பெப்ரவரி 12 ஆம் திகதி உண்ணாவிரதப் போராட்டம் நடைபெறும்.

நாடாளுமன்றம் கூடும் நாளில், நாடாளுமன்றத்துக்கு அருகே தனது தலைமையில் இந்தப் போராட்டம் நடைபெறும் என வைகோ கூறியுள்ளார். (ஓ-6)

# இலங்கை போர் நிறுத்தம் குறித்து பேசாதது ஏமாற்றமளிக்கிறது

## தொல்.திருமாவளவன்

(சென்னை)

ஆளுநர் உரையில்இலங்கை போர் நிறுத்தம் குறித்து வெளிப்படையாக பேசாதது ஏமாற்றம் அளிக்கிறது என்று விடுதலைச் சிறுத்தைகள் தலைவர் தொல். திருமாவளவன்தெரிவித்தார்.

மேலும்அவர்அவ் அறிக்கையில் குறிப்பிடுகையில்,

ஆளுநர் உரையில் அறிவிக்கப்பட்டுள்ள உயிர்காக்கும் உயர் சிகிச்சைக்கான முதல்வரின் காப்பீட்டுத் திட்டம் வரவேற்கத்தக்க ஒன்று.

இத் திட்டத்தின் கீழ் குடும்பம் ஒன்றுக்கு 1 இலட்சம் ரூபா வரை இலவசமாக மருத்துவம் பெற்றுக் கொள்ளலாம் என்று கூறப்பட்டுள்ளது.

இத் திட்டத்தை பொதுத்துறை காப்பீடு நிறுவனங்களோடு இணைந்து நடை முறைப் படுத்த வேண்டும். தனியார் காப்பீட்டு நிறுவனங்களோடு இணைந்து நடைமுறைப் படுத்தக்கூடாது.

ஈழத் தமிழர்சிக்கல் குறித்துத் தெரிவிக்கப் பட்டுள்ள கருத்துக்களில் போர் நிறுத்தம் செய்ய வேண்டுமென்று கூறப்படவில்லை. சட்டப்பேரவையில் ஏற்கனவே தீர்மானம் நிறை வேற்றப்பட்டும் கூட போர் நிறுத்தம் குறித்து வெளிப்படையாக பேசாதது ஏமாற்றம் அளிக்கிறது என்று கூறியுள்ளார். (ஓ-6)

# இந்தியாவின் மிகப் பெரிய இசை நூலகம் மும்பையில்

(சென்னை)

இந்தியாவின் மிகப் பெரிய இசை நூலகம் மும்பையில் தொடங்கப்பட்டுள்ளது.

மும்பையில் உள்ள புகழ்பெற்ற ஃபைன் ஆர்ட்ஸ் மற்றும் சங்கீத சபாவான சண்முகானந்தா சபா 55 ஆண்டுகளாக இசைப் பணியாற்றி வருகிறது.

இந்த சபாவில் 'ஸ்ரீ சண்முகானந்தா காஞ்சி மகாசுவாமி சங்கீத சங்கராலயா நூலகம்' என்ற பெயரில் மிகப்பெரிய இசை நூலகத்தை காஞ்சி சங்கராச்சாரியார் ஸ்ரீ ஜெயேந்திரர் சமீபத்தில் தொடக்கி வைத்தார்.

இது நாட்டின் மிகப்பெரிய இசை நூலகமாகும். இந்த நூலகத்தில் இசை குறித்து பல அரிய தகவல்கள் குவிந்துள்ளன. இசைக் கலைஞர்கள் ரசிகர்கள், மாணவர்கள் மற்றும் இசை ஆராய்ச்சியாளர்களுக்கு இந்த நூலகம் ஒரு வரப்பிரசாதமாகும்.

இந்த நூலகத்தில் தற்போது 20 ஆயிரம் மணி நேரம் மற்றும் 85 ஆயிரம் பாடல்களைக் கொண்ட பாரம்பரிய இசை (வாய்ப்பாட்டு மற்றும் வாத்திய இசை) கச்சேரிகளின் தொகுப்பு உள்ளது. இது தவிர பழமையான ஹரிகதை மற்றும் இசை பற்றிய சொற்பொழிவுகளின் தொகுப்புகள் உள்ளன. இன்னும் 6 மாதத்தில் இந்த நூலகம் முழுமையாக டிஜிட்டல் மயமாக்கப்படவுள்ளது. (ஓ-6)

# இலங்கையில் போரை நிறுத்தக்கோரி தீவிரமடையும் மாணவர் போராட்டங்கள்

(சென்னை)

இலங்கையில் தமிழர்கள் மீதான தாக்குதல்களை தடுத்து நிறுத்தக் கோரி தமிழகத்தில் மாணவர்கள் நடத்தி வரும் போராட்டம் தீவிரமடைகிறது.

இலங்கையில் போர் நிறுத்தம் ஏற்படுத்த இந்திய அரசு உடனடியாக தலையிட வேண்டும் என வலியுறுத்தி தமிழகம் முழுவதும் பள்ளி, கல்லூரி மாணவர்கள் போராடி வருகின்றனர்.

போராட்டத்தின் முதல் நாளான புதன் கிழமை சென்னை, திருச்சி, கோவை, தஞ்சாவூர், புதுக்கோட்டை, திருவாரூர், நாகை, நெல்லை, இராமநாதபுரம், விருதுநகர் மாவட்டங்களிலுள்ள ஏராளமான பள்ளி, கல்லூரிகளைச் சேர்ந்த இலட்சக்கணக்கான மாணவர்கள் வகுப்புகளைப் புறக்கணித்தனர். மாநிலத்தின் பல பகுதிகளில் மாணவர்கள் பேரணி, ஆர்ப்பாட்டங்களிலும் ஈடுபட்டனர்.

மாணவர்களின் போராட்டம் வியாழக்கிழமையும் தொடர்ந்து நடைபெற்றது. சென்னை பல்கலைக்கழக மாணவர்கள் நடத்திய வகுப்புப் புறக்கணிப்புப் போராட்டம் வீதி மறியலாக மாறியது.

இலங்கைத் தமிழர்களை காப்பாற்றக் கோரும் வாசகங்கள் அடங்கிய அட்டைகளை கையில் ஏந்தி பல்கலைக்கழக வளாகத்தில் மத்திய அரசுக்கு எதிராக கோஷங்களை எழுப்பினர். பின்னர், பல்கலைக்கழக வாயிலுக்கு வந்த மாணவர்கள் கோஷங்களை எழுப்பியபடி, கடற்கரைச் சாலையில் அமர்ந்தனர். இதனால், சிறிது நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மாணவர்கள் இரண்டாவது நாளாக தொடர்ந்து வகுப்புப் புறக்கணிப்பு மற்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். செங்கல்பட்டில் சட்டக்கல்லூரி மாணவர்கள் வியாழக்கிழமை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.


மாணவர்களின் போராட்டம் தொடர்ந்து நடைபெறும் என அனைத்துக் கல்லூரி மாணவர் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் கே. வெங்கடாசலம் தெரிவித்தார்.



சென்னை பச்சையப்பன் கல்லூரி, துரைப்பாக்கம் டி.பி. ஜெயின் கலை கல்லூரி மற்றும் திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, தர்மபுரி அரசு கலை கல்லூரிகள், விழுப்புரம், திருச்சி, சிவகங்கை, திண்டுக்கல் உள்ளிட்ட பல மாவட்டங்களைச் சேர்ந்த பள்ளி, கல்லூரி மாணவர்கள் வகுப்புப் புறக்கணிப்பு, ஆர்ப்பாட்டம், பேரணி ஆகியவற்றில் ஈடுபட உள்ளனர்.

போராட்டத்தில் மருத்துவம் மற்றும் பொறியியல் கல்லூரி மாணவர்களையும் ஈடுபடுத்துவது பற்றி பேசி வருகிறோம். இன்னும் ஓரிரு தினங்களில் அந்த மாணவர்களும் பேராட்டத்தில் குதிப்பார்கள்.

அனைத்துக் கல்லூரிகளின் மாணவர் பிரதிநிதிகளை சென்னையில் திரட்டி, சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தவும் திட்டமிட்டுள்ளோம் என்றார் வெங்கடாசலம். (ஓ-6)




# முல்லைத்தீவைப் படையினர் கைப்பற்றுவதுடன் தமிழீழப் போராட்டம் நின்று விடாது

## ஜெனரல் அசோக்மேதா தெரிவிப்பு

முல்லைத்தீவை கைப்பற்றினால் யுத்தம் நிறைவுற்றதென இலங்கை அரசாங்கம் உத்தியோகபூர்வமாக அறிவிக்க முடியாதென இந்தியாவின் ஓய்வுபெற்ற இராணுவ உயர் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

"விடுதலைப் புலிகளின் தமிழீழப் போராட்டம் முல்லைத்தீவைப் படையினர் கைப்பற்றுவதுடன் நின்றுவிடாது'' என 1987 ஆம் ஆண்டு இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்திருந்த இந்திய அமைதிப் படையில் அங்கம் வகித்தவர்களில் ஒருவரான ஜெனரல் அசோக் மேதா தெரிவித்தார். இலங்கை விவகாரங்கள் தொடர்பாக அல் - ஜெசீரா தொலைக்காட்சிக்கு வழங்கிய செவ்வியொன்றிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

விடுதலைப் புலிகளின் வசமிருக்கும் முல்லைத்தீவும் படையினரால் கைப்பற்றப் பட்டால், விடுதலைப் புலிகள் நாட்டின் ஆங்காங்கே சிறிய குழுக்களாக மீளக் குழுநிலைப் படுத்தக் கூடும் எனவும் தகவல் வெளியிட்டார்.

எனவே முல்லைத்தீவை இலங்கை அரசாங்கம் கைப்பற்றுமிடத்து, யுத்தம் நிறைவுற்றதென உத்தியோகபூர்வமாக அறிவிக்க முடியாதெனவும் அவர் கூறினார்.

எந்தவொரு பயங்கரவாத அமைப்பின் தலைவரும் களத்தில் போரிடுவதில்லையென கருத்து வெளியிட்ட அவர், விடுதலைப் புலிகளின் தலைவர் மலேசியாவிலோ அல்லது தென் இந்தியாவிலும் கூட தனது தமிழீழ போராட்ட நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கலாம் எனவும் ஜெனரல் அசோக் மேதா அந்தச் செவ்வியில் மேலும் குறிப்பிட்டார். (ஓ)

# ஆஸி. பந்து வீச்சாளர்கள் சொதப்பல் தென்னாபிரிக்க அணி அபார வெற்றி

(சிட்னி)

அல்பி மோர்கலின் அதிரடியான துடுப்பாட்டத்தின் மூலம் தென்னாபிரிக்க அணி 3 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் அவுஸ்திரேலிய அணியை வீழ்த்தியது.

இவ்வெற்றியின் மூலம் தென்னாபிரிக்க அணி 5 போட்டிகள் கொண்ட தொடரில் 2:1 என்ற கணக்கில் முன்னிலையிலுள்ளது.

அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணி 3 டெஸ்ட்,2 இருபது-20 மற்றும் 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் டெஸ்ட் தொடரை 2:1 என்ற கணக்கில் தென்னாபிரிக்க அணியும் இருபது-20 தொடரை 2:0 என்ற கணக்கில் அவுஸ்திரேலிய அணியும் கைப்பற்றின.

தொடர்ந்து நடைபெற்ற ஒருநாள் தொடரில் முதல் இரண்டு போட்டிகளில் இரு அணிகளும் தலா ஒரு போட்டியில் வெற்றிபெற்று தொடர் 1:1 என்ற கணக்கில் சமனிலையிலுள்ள நிலையில் மூன்றாவது போட்டி நேற்று சிட்னியில் நடைபெற்றது.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி வோர்னர்-மார்ஷின் சிறப்பான ஆரம்ப இணைப்பாட்டத்தின் மூலம் 49.2 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 269 ஓட்டங்களை எடுத்தது.

இதில் வோர்னர் 60 பந்துகளில் (6 பவுண்டரிகள்,2 சிக்ஸர்கள் அடங்கலாக) 69 ஓட்டங்களையும் மார்ஷ் 43 ஓட்டங்களையும் டேவிட் ஹசி 36,ஹோப்ஸ் 33 மற்றும் பொன்டிங் 29 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் அணித்தலைவர் போதா 3 விக்கெட்டுக்களையும் ஸ்ரையன்,நிற்னி ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் மற்றும் டுமினி ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 270 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி ஆரம்பத்தில் அம்லா 13 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்த போதும் இரண்டாவது விக்கெட்டுக்காக கிப்ஸ்-கலிஸ் ஜோடியின் சிறப்பான இணைப்பாட்டத்தின் மூலம் தென்னாபிரிக்க அணி சரிவிலிருந்து மீண்டது.

எனினும் தொடர்ந்து களமிறங்கிய டி வில்லியர்ஸ் 5,டுமினி 9 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க 28.2 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களையிழந்து 163 ஓட்டங்களை மாத்திரமெடுத்து தடுமாறியது.

எனினும் அடுத்து களமிறங்கிய மக்கன்சி, பௌச்சர் மற்றும் மோர்கலின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் தென்னாபிரிக்க அணி 46.3 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 270 ஓட்டங்களை எடுத்து 3 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இதில் கிப்ஸ் 52 பந்துகளில் (10பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 64 ஓட்டங்களையும் கலிஸ் 60 ஓட்டங்களையும் அல்பி மோர்கல் 22 பந்துகளில் (6 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர்கள் அடங்கலாக) 40 ஓட்டங்களும் மற்றும் பவுச்சர் ஆட்டமிழக்காமல் 31 ஓட்டங்களும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ஹயூரிஸ் 2 விக்கெட்டுக்களையும் தைட்,பிறக்கன்,ஜோன்ஸன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இவ் வெற்றியின் மூலம் தென்னாபிரிக்க அணி 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் 2:1 என்ற கணக்கில் முன்னிலையிலுள்ளது.

இப் போட்டியில் தென்னாபிரிக்க அணியின் வெற்றிக்கு திருப்புமுனையமைத்த அல்பி மோர்கல் ஆட்டநாயகனாக தெரிவானார்.

இரு அணிகளுக்குமடையிலான தீர்க்கமான நான்காவது ஒருநாள் போட்டி 26ஆம் திகதி நடை பெறுகிறது.

## புதிய சாதனை படைக்க முரளி இன்று களத்தில்

(லாகூர்)

இலங்கை-பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான தீர்க்கமானதும் மூன்றாவதும் இறுதியுமான ஒருநாள் போட்டி இன்று லாகூரில் நடைபெறுகிறது.



தொடரின் முதல் இரண்டு போட்டிகளில் இரு அணிகளும் தலா ஒன்றில் வெற்றி பெற்று 1:1 என்ற கணக்கில் தொடர் சமநிலையில் உள்ளது.

இந்நிலையில் இன்றைய போட்டியில் வெற்றிபெறும் அணி தொடரைச் சுவீகரிக்கும். இன்றைய போட்டியில் இரு அணிகளும் வெற்றிக்கு போராடும் என்பதால் விறுவிறுப்புக்குப் பஞ்சமிருக்காது என்பது தெரிந்ததே.

இதற்கு மேலாக சர்வதேச ஒருநாள் போட்டிகளில் இன்று இலங்கை அணியின் நட்சத்திர சுழல்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் 5 விக்கெட்டுக்களை வீழ்த்தினால் பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவர் வசிம் அக்ரமின் 502 என்ற விக்கெட்டுக்கள் சாதனையை முறியடித்து புதிய வரலாறு படைக்கலாம்.

இதுவரை சர்வதேச ஒருநாள் போட்டிகளில் 498 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ள முரளிதரன் இன்றைய போட்டியில் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினால் இரண்டாவது சர்வதேச வீரர் என்ற சாதனையை படைக்கலாம்.

(5)

## சர்வதேச ஒருநாள் போட்டிகளில் 10ஆயிரம் ஓட்டங்களைக் கடந்தார் சகலதுறை வீரர் ஜக்கலிஸ்



(சிட்னி)

சர்வதேச ஒருநாள் போட்டிகளில் தென்னாபிரிக்க அணியின் சகலதுறை வீரர் ஜக்கலிஸ் 10ஆயிரம் ஓட்டங்களைக்கடந்தார்.

அவுஸ்திரேலிய அணிக்கு எதிராக நேற்று சிட்னியில் நடைபெற்ற மூன்றாவது ஒருநாள் போட்டியில் ஜக்கலிஸ் 60 ஓட்டங்களை எடுத்தார்.

ஜக்கலிஸ் 16 ஓட்டங்களை எடுத்தபோது சர்வதேச ஒருநாள் போட்டிகளில் 10 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்து 8ஆவது வீரர் என்ற பெருமையைப்பெற்றார்.

அவுஸ்திரேலியாவுடனான டெஸ்ட் தொடரின் போது ஜக்கலிஸ் கூடுதலாக 12 ஓட்டங்களை எடுத்திருந்தால் டெஸ்ட் அரங்கிலும் 10 ஆயிரம் ஓட்டங்களை கடந்திருக்க முடியும்.

எதிர்வரும் மாதம் தென்னாபிரிக்காவில் நடைபெறும் அவுஸ்திரேலியாவுடனான டெஸ்ட் தொடரில் ஜக்கலிஸ் அந்த மைல் கல்லை கடப்பார்.

சர்வதேச கிரிக்கெட் அரங்கில் டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகள் 418 போட்டிகளில் விளையாடியுள்ள ஜக்கலிஸ் துடுப்பாட்டத்தில் 20ஆயிரத்து 75 ஓட்டங்களை எடுத்துள்ளதுடன் பந்துவீச்சில் 498 விக்கெட்டுக்களை கைப்பற்றியுள்ளதுடன் களத்தடுப்பிலும் 246 பிடிகளை எடுத்துள் ள சகலதுறை வீரராவர்.

## சபீனா,பெட்ரோவா நான்காவது சுற்றில்

(மெல்பேர்ன்)

2009ஆம் ஆண்டின் முதல் கிராண்ட் ஸ்லாம் போட்டியான அவுஸ்திரேலிய ஓபன் டெனிஸ் போட்டி மெல்பேர்ன் நகரில் நடைபெற்று வருகிறது.

நேற்றுக் காலை நடந்த பெண்கள் ஒற்றையர் பிரிவு 3ஆவது சுற்று ஆட்டத்தில் 3ஆம் நிலை வீராங்கனையான டினாரா சபீனா (ரஷ்யா) 25ஆம் நிலை வீராங்கனையான கயா கனிபி (எஸ்டோனியா) மோதினார்கள் இதில் சபீனா 6:2,6:2 என்ற நேர் செட் கணக்கில் எளிதில் வென்று 4ஆவது சுற்றுக்குத் தகுதி பெற்றார்.

சானியாவைத் தோற்கடித்த 10ஆம் நிலை வீராங்கனையான நாடியா பெட்ரோவா (ரஷியா) 3ஆவது சுற்றில் கஜகஸ்தானை சேர்ந்த காலினாவை எதிர் கொண்டார்.

இதில் பெட்ரோவா 6:1 என்ற கணக்கில் முன்னிலையிலிருந்த போது காலினா காயம் காரணமாக போட்டியிலிருந்து வெளியேறினார். இதனால் பெட்ரோவா வென்றதாக அறிவிக்கப்பட்டது.

# மூன்றாவது போட்டியிலும் வென்று பங்களாதேஷ் தொடரை சுவைத்தது

(மிர்பூர்)

மூன்றாவது ஒருநாள் போட்டியில் 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் சிம்பாவே அணியை வீழ்த்தி பங்களாதேஷ் அணி தொடரை 2:1 என்ற கணக்கில் கைப்பற்றியது.

பங்களாதேஷிற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்ட சிம்பாவே அணி 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடியது.

இதில் முதலிரண்டு போட்டிகளில் இரு அணிகளும் தலா ஒரு போட்டியில் வெற்றி பெற்று தொடர் 1:1 என்ற கணக்கில் சமனிலையிலிருந்தது.

இந்நிலையில் தீர்க்கமான மூன்றாவதும் இறுதியுமான போட்டி நேற்று மிர்பூரில் நடைபெற்றது.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

எனினும் நேற்றுக் காலை மிர்பூர் மைதானத்தில் காணப்பட்ட சீரற்ற காலநிலை காரணமாக போட்டி தாமதமாகவே ஆரம்பமானது.

இதனடிப்படையில் இரு அணிகளுக்கும் தலா 37 ஓவர்கள் ஆக ஆட்டம் குறைக்கப்பட்டது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாவே அணி 37 ஓவர்களில் 9 விக்



கெட்டுக்களையிழந்து 119 ஓட்டங்களை எடுத்தது.

இதில் வில்லியம்ஸ் 38 ஓட்டங்களையும் டபென்ங்வா ஆட்டமிழக்காமல் 21 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் மோர்டாஷா,சகிப் அல் ஹசன் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும் மாமுடுல்லா 2 விக்கெட்டுக்களையும்,ருபெல் ஹுசைன் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 37 ஓவர்களில் 120 ஓட்டங்களை எடுத்தால் வெற்றிஎன்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி சகிப் அல் ஹசனின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் 32.3 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 121 ஓட்டங்களை எடுத்து 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இதில் தமிம் இப்பால் 34 ஓட்டங்களையும் சகிப் அல் ஹஷன் ஆட்டமிழக்காமல் 33 ஓட்டங்களையும் முஷ்பிஹுார் ரகீம் ஆட்டமிழக்காமல் 20 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் பிறிஸ் 2 விக்கெட்டுக்களையும் ம்போபு ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இவ் வெற்றியில் மூலம் பங்களாதேஷ் அணி 3 போட்டிகள் கொண்ட தொடரில் 2:1 என்ற கணக்கில் தொடரைக் கைப்பற்றியது.

இப் போட்டியில் பங்களாதேஷ் அணியின் வெற்றிக்கு வழியமைத்த மோர்ட்டாஷா ஆட்டநாயகனாகத் தெரிவானார். சகிப் அல் ஹசன் தொடர் நாயகன் விருதை பெற்றார்.

## மற்றொரு பாதுகாப்...

(வயது56) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இதேவேளை மூங்கிலாறில் இயங்கும் கிளிநொச்சி அரச செயலக சுற்றயலில் நேற்று முன்தினம் இரவு 11.00 மணியளவில் நடத்திய எறிகணைத் தாக்குதலில் சிறுமி ஒருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் 8பேர் படுகாயமடைந்துள்ளனர்.

கொல்லப்பட்ட சிறுமி கே.நிரோசா (வயது 10)என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

உடையார்கட்டு பகுதியில் இருட்டுமடு இடம் பெயர்ந்தோர் பொதுமக்கள் குடியிருப்புக்கள் மீது நேற்று காலை 10.45 மணிக்கும் முற்பகல் 11.00 மணிக்கும் படையினர் எறிகணைத் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இப்பகுதி அரசாங்கத்தால் பாதுகாப்பு வலயம் என பிரகடனப்படுத்தப்பட்டிருந்த நிலையில் படையினர் ஏவிய எறிகணைகள் வீழ்ந்து வெடித்துள்ளன. இதில் முதியவர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளதுடன்34 பேர் படுகாயமடைந்துள்ளனர். (ச-5)

## பயங்கரவாதத்தை...

கூட்டமைப்பினரை சந்திக்கவுள்ளார்.

இந்த சந்திப்பு கொழும்பில் நடைபெறவுள்ளது. இந்த சந்திப்பில் தமிழ்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைவர் ஆர்.சம்பந்தன் தலைமையில் பங்கேற்கவுள்ளனர்.

இதேவேளை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அகாசியை சந்திக்கவுள்ள போதும் இன்னும் அதற்கான நேரம் குறிப்பிடப்படவில்லை என காங்கிரஸின் செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் ஹசன் அலி தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் இலங்கையில் கடந்த மூன்று தசாப்த காலமாக நிலவிய அசாதாரண சூழ்நிலைகள் முடிபுற்று சமாதானம் நிலைபெறும் சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளதாக சமாதான தூதுவர் யசூசி அகாசி தெரிவித்துள்ளார். இலங்கைக்கான ஜப்பானிய தூதுவரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் ஜே. என்.பியின் தலைவர் விமல் வீரவன்சவுடன் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த சந்திப்பின் போது உரையாற்றிய யசூசி அகாசி ஜப்பான் அரசாங்கம் இலங்கையின் சமாதானத்திற்காக எந்த சந்தர்ப்பத்திலும் அர்ப்பணிப்புடன் செயற்படும் என குறிப்பிட்டார்.

அத்துடன் மோதல்கள் நிறைவுற்றதன் பின்னர் வடக்கு மக்களின் பிரச்சினைகளுக்கு அரசியல் ரீதியாகவோ, வேறு முறைகளிலோ துரித தீர்வுகளை வழங்க வேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ச-5)


**SUBRA (14)**

தரம் 5 - 2009

வட்டுக்கோட்டை — கைலைநாதன்

புதிய பிரிவு II ஆரம்பம்

சித்தன் கேணி — சசிதரன்

புதிய பிரிவு III ஆரம்பம்

- ★ ஒரு பிரிவில் -(40) மாணவர்கள் மட்டும் 2008ல் – 28 மாணவர் சித்தி
- ★ வாரம் தோறும் — வெற்றித் தேர்வு
- 29ஆம் திகதிக்கு முன் — Bond
- அனுமதி பெறவும் — புண்ணியாமின்
- ★ இலவச சிங்கள வகுப்பு
- ★ இலவச கணனி வகுப்பு

**01.02.2009 முதல் பரீட்சைப் புள்ளிகள் வாரம் தோறும் வலம்புரியில்**

தரம் 01 முதல் 03 வரை சிறப்பான ஆசிரியர் குழுவின் வழிகாட்டல் வகுப்புக்கள்

வெகுவிரைவில் விசேட வகுப்பு மின்னொளியில் அனுமதிகள் வழங்கப்படுகின்றது –சிறப்புப் பிரிவு தினமும் மாலை 6–7 வரை

(C-2062)

**JANASHAKTHI INSURANCE PLC**

ஜனசக்தி காப்புறுதி நிறுவனம்

JANASHAKTHI INSURANCE

**பதவி வெற்றிடம்**

இலங்கையில் ISO 9001:2000 தரச் சான்றிதழ் பெற்ற ஒரே ஒரு காப்புறுதி நிறுவனமான ஜனசக்தி காப்புறுதிக் கம்பனி பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

உங்களின் தகைமை மற்றும் திறமைக்கேற்ப நீங்கள் விண்ணப்பிக்கலாம்.

*கிளைகள்:-* யாழ்ப்பாணம், நெல்லியடி, சுண்ணாகம்

*பதவி நிலைகள்:-*
01) பிரதேச பிரதிநிதிகள்
வருமானம்:- வரையறையற்றது
02) விற்பனை மேற்பார்வையாளர்
வருமானம்:- 10,000/=
03) வியாபார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்
சம்பளம்:- 10,000/= முதல் 15,000/= வரை
04) வியாபார நிறைவேற்று அதிகாரிகள்
சம்பளம்:- 15,000/= முதல் 20,000/= வரை

*தகைமைகள்:-*
- க.பொ.த (சா/த) சித்தி
- காப்புறுதித்துறையில் 03 வருட அனுபவம் மற்றும் க.பொ.த (உ/த) சித்தி (பதவி நிலை 03,04)

*வயது:-* 19 முதல் 50 வரை (இருபாலாரும்)

*விண்ணப்ப முடிவுத்திகதி:-* 02.02.2009

*விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவர்:-*

முகாமையாளர்
ஜனசக்தி இன்சூரன்ஸ் கம்பனி,
விக்கினேஸ்வரா கல்லூரி வீதி,
நெல்லியடி.

(2138)


## மக்களின்...

அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என நாம் கோரிக்கை விடுப்ப துடன் மனித உரிமை மீறல்களில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென வேண்டுகோள் விடுப்பதாக பிரித்தானியா வெளிவிவகார அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார். அதேநேரம் இலங்கையில் ஊடகங்கள் மீது நடாத்தப்படும் தாக்குதல்களையும் கண்டிப்பதாக பிரித்தானியா தெரிவித்துள்ளது. (ச-3,5,14)

## பிரபாகரன்...

வாய்ப்பிருப்பதாக கூறப்படுகின் றது.

இந்தோனேசியா, மலேசியா, பாங்கொக் போன்ற இடங்களில் அவர்களிற்கு வர்த்தக ரீதியான தளங்கள் இருக்கின்றது.

இருந்தபோதும் அங்கு தப்பி செல்வதென்பது முடியாதகாரியம். ஏனெனில் நீண்ட கடல் பயணங்களூடாகச் செல்வது ஆபத்தான விடயம் எனவும் குறிப்பிட்ட அவர், விடுதலைப் புலிகளின் தலைவர் வன்னியில் இருந்து கெரிலாப் போராட்டத்தை மேற்கொள்ளவே முனையக் கூடும் என்றும் கூறியுள்ளார். (ச-14)

## 'ரிவிர' ஏட்டின்...

நால்வர் நேற்றுக் காலை 7.30 மணியளவில் இவர்கள் மீது தாக்குதல் நடத்தியதாக அவரது மனைவி தெரிவித்தார்.

இதில் ரிவிர ஏட்டின் பிரதம ஆசிரியர் உபாலி தென்னக்கோனும் அவரின் மனைவியும் காயமடைந்துள்ளனர்.

உபாலி தென்னக்கோனுக்கு முகத்திலும் கைகளிலும், அவரின் மனைவிக்கு சிறுகாயங்களும் ஏற்பட்டுள்ளது. இருவரும் கொழும்பு தேசிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அப்பகுதி மக்கள் திரண்டு வந்த போது தாக்குதலாளிகள் அந்த இடத்தினை விட்டு தப்பியோடி விட்டதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச-5)


**LAVA HOSPITAL**

75, கோயில் வீதி, யாழ்ப்பாணம்

- ★ விசேட வைத்திய நிபுணர்களின் சிகிச்சைகள்.
- ★ MBBS வைத்தியரால் நடத்தப்படும் வெளிநோயாளர் பிரிவு.
- ★ ECG, ஸ்கான் (SCAN) பரிசோதனைகள்.
- ★ சகலவிதமான இரத்த, சல பரிசோதனைகள்.

உடல் பருமனைக் குறைப்பதற்கான விசேட சிகிச்சைகள்

(C-2061) T.P: 021 222 7251


## ஈழத்தமிழர்களை காப்...

ஈழத்தமிழர்கள் பாதிக்கப்பட்டிருப்பது பற்றி பேசினார். அதற்கு ஈழத்தமிழர்களைக் காக்க எல்லா ஏற்பாடுகளும் நடந்து வருகின்றது என்று இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவர் திருமதி சோனியா காந்தி, தங்கபாலுவிடம் தெரிவித்தார்.

சந்திப்பின் போது இலங்கையில் நடந்து வரும் கடும் போர் காரணமாக ஈழத்தமிழர்கள் பாதிக்கப்பட்டிருப்பது பற்றி சோனியாவிடம் தங்கபாலு தெரிவித்தார்.

அதற்கு சோனியா காந்தி, ஈழத்தமிழர்கள் விடயத்தில் தமிழக மக்கள் விருப்பப்படி எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்றார்.

சோனியா மேலும் கூறுகையில், ஈழத் தமிழர்களை பாதுகாப்பது தொடர்பாகத்தான் வெளியுறவுச் செயலாளர் சிவ்சங்கர் மேனன் கொழும்பு சென்று பேச்சு நடாத்தி வந்துள்ளார்.

எனவே ஈழத்தமிழர்களை காக்க எல்லா ஏற்பாடுகளும் நடந்து வருகின்றது என்றார். இந்த தகவல்களை சோனியாவை சந்தித்து விட்டு வெளியில் வந்ததும் தங்கபாலு நிருபர்களிடம் தெரிவித்தார். இந்த சந்திப்பின்போது தமிழ் நாடு காங்கிரஸ் கட்சி சார்பில் சமீபத்தில் நடத்தப்பட்ட போராட்டம் பற்றிய முழு விபரங்களையும் சோனியாகாந்தி கேட்டு அறிந்ததாகத் தெரிகிறது. (ச-5)

## தங்களைக் காப்பாற்றுமாறு...

பி.பி.சி தமிழ் ஓசைக்கு வழங்கிய செவ்வியிலே தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து இடம் பெயர்ந்தவர்களும் மன்னாரிலிருந்து வந்தவர்களும் வவுனியா வடக்கிலிருந்து இடம் பெயர்ந்த மக்களும் யாழ்ப்பாணத்தில் இருந்து ஏற்கனவே வந்தவர்களுமாக 4 லட்சத்து 70 ஆயிரம் மக்கள் முல்லைத்தீவு மாவட்டத்தில் வாழ்ந்துவருவதாக அவர் குறிப்பிட்டார்.

ஒரு குறுகிய இடத்தில் இந்த மக்கள் அடர்த்தியாக வாழ்ந்து வருகிறார்கள். இராணுவத்திற்கும் புலிகளுக்கும் இடைப்பட்ட பகுதிகளில் சிக்குண்டிருக்கிறார்கள். இதனால் பொதுமக்கள் இலக்கு வைக்கப்பட வேண்டியேற்படுகிறது. எறிகணைத்தாக்குதல்கள் இரண்டு பகுதியிலும் சரமாரியாக மேற்கொள்ளப்படுகிறது. இதனால் மக்கள் வெளியே நகரமுடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. மக்கள் பதுங்கு குழிகளுக்கு அருகில் இருந்து கஞ்சி காய்ச்சியே குடிக்கிறார்கள்.

பதுங்கு குழிகளைச் சுற்றியே மக்கள் இருப்பினும் எறிகணைகள் பதுங்குகுழிகளுக்கு மேலாகவும் விழுகின்றது. மக்கள் பயணிக்கும் வீதிகளிலும் எறிகணைகள் விழுகின்றன. பாடசாலைகள், வைத்தியசாலைகள் மக்கள் இருப்பிடங்கள் என எறிகணைகள் விழுகின்றன. இது தவிர்க்கமுடியாததாக இருக்கிறது. ஏனெனில் மிகவும் குறுகிய இடத்திலே தற்போது மோதல்கள் நடந்துகொண்டிருக்கிறது எனவும் அவர் குறிப்பிட்டார். (ச-14)

## ஈழத் தமிழர்களைக்...

தமிழ்நாடு சட்டசபையில் நேற்று இலங்கையில் உடனடியாக போர் நிறுத்தம் செய்யப் படவேண்டுமெனவலியுறுத்தி தமிழ்நாடுஅரசு தீர்மானம் கொண்டுவந்தது.

தீர்மானம் மீது பல்வேறு கட்சிகளின் உறுப்பினர்கள் உரையாற்றினர். இறுதியாக தமிழ்நாடு முதல்வர் கலைஞர் கருணாநிதி உரையாற்றினார். அவர் தனது உரையில்,

இலங்கையில் தமிழினமே அழிந்து கொண்டிருக்கிறது. ஐ.நா.மன்றம் கண்டனம் தெரிவிக்கிற அளவிற்கு, அந்த நாடு அப்பாவித்தமிழ் மக்களின் இடுகாடாக–சுடுகாடாக ஆகிக்கொண்டிருக்கிறது.

குழந்தை குட்டிகளோடு குடும்பம் குடும்பமாக குய்யோ முறையோ என்ற கூச்சலும்–ஒப்பாரியும் புலம்பலும் பின் னணியாக, பிணங்கள் குவிக்கப்படுகின்றன. அத்தனையும் தமிழ் மக்களின் பிணங்கள்.

ஐயோ! அந்த சிங்கள இராணுவக் குண்டுவீச்சுக்கிடையே சிதறியோடும் சிறுவர் சிறுமியர் சிலராவது செத்துப் பிழைத்தார்கள் என்ற செய்தியும் கூட அறவே அற்றுப்போய், இன்று கூண்டோடு சாகின்றனரே! கூண்டோடு அழிகின்றனரே!

மனித நேயமற்ற மாபாவிகளின் சேட்டையால், இத்தனையாண்டுகள்; இழித்தும்–பழித்தும்–இறுதியாக அழித்தும் ஒழிக்கப்படுகின்றதே உலகை ஆண்ட ஓர் இனம் அந்த இனத்தை இறுதியாக இலங்கையில் விடப்பட்டுள்ள இந்த அறைகூவலில் இருந்து எப்படி மீட்கப்போகின்றோம்?

இந்தியாவில் உள்ள தமிழ் நாடு என்ற மாநிலத்தில் நாம் வாழ்கின்றோம் என்பதால் நம்மை அரவணைத்துக் காத்திடும் பொறுப்பை இந்திய பேரரசு பார்த்துக் கொள்ளும்–ஆம், பார்த்துக்கொள்ள வேண்டுமென்ற உரிமையோடு எதிர்பார்க்கின்றோம்.

இலங்கையில் சீரழியும் செத்துமடியும் எங்கள் தமிழ்ச் சாதியை காப்பாற்றுக என்று கண்ணீர் மல்க கேட்கின்றோம். கேட்டுக் கேட்டு பயன்விளையாமல் போனதால்–இறுதி வேண்டுகோளாக முறையிடுகிறோம். உடனடியாக இலங்கையில் போர் நிறுத்தம் செய்து அந்தப் புத்தர் உலவிய பூமியில் அமைதிப் பூ மலர்ந்திட–ஆவன செய்திடுக என்று! இந்த இறுதி வேண்டுகோள் புறக்கணிக்கப்படாமல்–இன்றே போர் நிறுத்தம் இலங்கையில்–அடுத்து அரசியல் தீர்வு–தொடர்ந்து அமைதி.

கூட்டத்தில் விவாதித்து அடுத்து என்ன என்று முடிபெடுக்கப்படும் என்பதை இந்த மன்றத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன். இங்கே பேசிய நண்பர்கள் சிலர் பேர் ஆட்சி எதற்காக என்றார்கள். ஆட்சியென்று ஒன்று இருக்கின்ற காரணத்தி னால்தான் நாம் இந்த அளவிற்காவது கேட்கமுடிகிறது.

எனவே அந்த நல்ல விளைவை எதிர்பார்த்து; இந்த மாமன்றத்தில் இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து இறுதித் தீர்மானமாக இதனை நான் முன்மொழிகின்றேன். இந்ததீர்மானத்திற்கும் பயன் ஏதும் ஏற்படாவிட்டால் ஆளும் கட்சியான தி.மு.க. பொதுக்குழு அல்லது செயற்குழு கூட்டத்தில் விவாதித்து அடுத்து என்ன என்று முடிபு எடுக்கப்படும் என்பதை இந்த மன்றத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இங்கே பேசிய நண்பர்கள் சிலபேர் ஆட்சி எதற்காக என் றார்கள். ஆட்சியென்று ஒன்று இருக்கின்ற காரணத்தினால்தான் நாம் இந்த அளவிற்காவது கேட்கமுடிகிறது– இங்கே ஒரு தீர்மானத்தையாவது போடமுடிகிறது என்பதையும்சிலபேர்நமக்கு சொல்கின்ற காரணத்தால்– அதையும் நாம் யோசித்துக் கொண்டிருக்கின்றோம். தேவையில்லை, நாளைக்கே ஆட்சியை இழந்துவிட்டால், இலங்கையிலே தமிழீழம் மலரும் என்ற உறுதி கிடைக்குமேயானால் அதற்கும் நாம் தயாராக இருப்போம். என்பதையும் எடுத்துக்கூறி– மீண்டும் ஒரு முறை சொல்கிறேன்–'ஐயகோ இலங்கையில்தமிழினமே அழிகிறது –இந்தியப் பேரரசுக்கு இறுதி வேண்டுகோள்' என்பதை டெல்லியிலே உள்ளவர்களுடைய செவிகளிலே விழ ஓங்கி ஒலித்து இந்த தீர்மானத்தை இந்த மாபெரும் அவையிலே முன்மொழிந்து இந்த அளவில் நன்றி கூறி விடைபெறுகிறேன் என்றார். (ச-5)


**முக்கிய அறிவித்தல்**

**கிருஷ்ணா அடகு கடை**

370,கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

பதிவு இல. J/DS/BR/472


மேலே குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2007ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு (2007.12.31) முன்னர் அடகு வைத்து மீட்கப்படாத அடகு நகைகள் யாவற்றையும் 2009ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28ஆம் திகதிக்கு (2009.02.28) முன்பு மீட்டுக் கொள்ளவும்.

தவறின் 28ஆம் திகதி பெப்ரவரி மாதம் 2009ஆம் ஆண்டு (28.02.2009) அன்று விற்கப்படும் என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

-உரிமையாளர்

370, K.K.S. Road, Jaffna. (C-2057)

**வேலைவாய்ப்பு**



இலங்கையில் முன்னணிக் காப்புறுதி நிறுவனங்களில் ஒன்றான யூனியன்ஸ் அஷ்யூரன்ஸின் .
யாழ்.மாவட்ட புதிய 2 கிளைகளுக்கான பதவி வெற்றிடம்

பதவி: காப்புறுதி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்

தகைமை:
- ❖ க.பொ.த. உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்தி *(ஆகக்குறைந்த தகைமை)*
- ❖ காப்புறுதித் துறையில் OR வியாபார மேம்படுத்தலில் முன்னனுபவம் விரும்பத்தக்கது *(கட்டாயமல்ல)*.

நன்மைகள்:
- ❖ நிரந்தர அடிப்படைச் சம்பளத்துடனான வேலைவாய்ப்பு
- ❖ பயிற்சிக் காலத்தின் போது மேலதிக ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப்படும்.

வாழ்க்கையில் ஏதாவது **சாதிக்க வேண்டும்** என எண்ணுகிறீர்களா?
உங்களிடம் **திறமையுடன் தகைமை** இருக்கிறதா?
உங்கள் மீது உங்களுக்கு **தீவிர நம்பிக்கை** இருக்கிறதா?

*ஏன் தயக்கம் தோற்றுங்கள் நேர்முகத் தேர்விற்கு*

நேர்முகத் தேர்வு: காலம்: திங்கட்கிழமை (26.01.2009)
நேரம்: முற்பகல் 9.30 மணி
இடம்: யூனியன் அஷ்யூரன்ஸ்
139,ஸ்ரான்லி வீதி,யாழ்ப்பாணம்.

யூனியன் அஷ்யூரன்ஸில் இணைவதன் ஊடாக நீங்கள் காப்புறுதி உலகில் அங்கீகரிக்கப்படுகின்றீர்கள்.

G.ஸ்ரீவரதன்,அபிவிருத்தி முகாமையாளர்.

(C-2058)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.01.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.